கணேசன்

அமரர்

செல்லையா கணேசன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் நினைவுச் சுவடுகள்

12.01.2012

சிவமயம்

யாழ்ப்பாணம் வடமராட்சி செல்மைகால்
துன்னாலை மத்தி கரவெட்டி
காலஞ்சென்ற செல்லையா இலட்சுமி தம்பதியினரின் ஏக புத்திரனும்
காலஞ்சென்ற வடஅல்வாய்
செல்லையா தங்கம்மா தம்பதியினரின் மூத்த மருமகனும்
அமரர் செல்வேஸ்வரியின் அன்புக்கணவரும்
திருமதி. பரிமளா ரவீந்திரன்
திரு. கணேசன் கிரிதரன்
திரு. கணேசன் சனாதரன்
திருமதி. கோசலா வேல்நாதன்
திரு. கணேசன் வினோதரன்
ஆகியோரின் பாசமிகு தந்தையுமாகிய

அமரர்

செல்லையா கணேசன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்களின் சிவப்பதபேறுகுறித்த நினைவுச்சுடர்

12.01.2012

சிவமயம்

சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் எம்
இதயத்திற்கு உரமூட்டிய தந்தையே
மனைவிக்கு சிறந்த கணவனாகவும்
பிள்ளைகள் எமை அன்போடும் பண்போடும்
பேரப்பிள்ளைகளையும் பாசத்தோடும்
பாதுகாத்துப் நற்கல்வியூட்டி நற்செல்வமும்
பெற்றிட வழிநடாத்தி அரும்பாடுபட்டு
ஆளுமையுள்ளவர்களாகவும் ஆக்கி
எமையெல்லாம் வளர்த்த தந்தையே
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அன்புத்தெய்வத்தின்
பாதக்கமலங்களுக்கு இவ்வேட்டினை
காணிக்கையாக்கி பணிவன்புடன்
சமர்ப்பிக்கின்றோம்.

நெஞ்சகலாத நினைவுகளுடன்.....

மலர்வு 27 . 05 . 1929

உதிர்வு 13 - 12 - 2011

அமரர்

திரு. செல்லையா கணேசன்

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)

திதி நிர்ணய வெண்பா

செம்மைநிறை கரவருட சிந்தைகுளிர் கார்த்திகையில்
தெம்பிழந்து அமரபக்க திருதியையில் – மும்மொழியாளன்!
செல்லையா கணேசன் செகத்தினில் வாழ்ந்தகன்று
வல்லசிவன் நிழலுற்றார் விரைந்து!

உ
சிவமயம்

தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டும் செஞ்சோற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை

தேவாரம்

சலம்பூ வொடுதூபம் மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங் கிலுமுன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தா தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடல் உள் ளுறுசூலை தவிர்த்தருள்வாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக் கெடிய
வீரட்டானத் துறையம் மானே.

திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய்
தேனினை சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வு சூழ் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பலமாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூர்த்தின்
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

திருப்புகழ்

கைத்தல் நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பக எனவினை கடிதேகும்
முத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்பொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறுமுருகனை
அக்கணம் மணமருள் பெருமாளே.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

ஆசிரியர் திலகம்
அமரர். செல்லையா.கணேசன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

ஈழத்திருநாட்டின் வளம்மிக்க வடமராட்சி மண்ணில் செழிப்புடனும், கல்வி வளம் நிறைந்தும், சைவப்பாரம்பரியத்துடன் விளங்கும் துன்னையம்பதியில் (துன்னாலை) அமரர் செ.கணேசன் அவர்கள் 1929ம் ஆண்டு வைகாசிமாதம் இருபத்தேழாம் திகதி சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த செல்லையா அவர்கட்கும், நல்லொழுக்கம் நிறை நங்கையாம் இலட்சுமிக்கும் ஏகபுத்திரனாகப் பிறந்தார். இவருடைய உடன் பிறப்புக்களாக காலஞ்சென்ற திருமதி. சோதிமுத்து. சின்னத்துரை, திருமதி. யோகம்மா.செல்லபாக்கியம் ஆகியோருக்கு அருமைச்சகோதரனாக வாழ்ந்து வந்தார்.

இவருடைய தந்தையார் தனவந்தராக இருந்தமையினால் அன்றைய சமூகச் சூழலில் பணக்காரச்செல்லர்□ என அழைக்கப்பட்டு மதிப்புடன் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் கல்வி ஞானமிக்கவராகவும் இருந்தமையால் தனது ஏக புத்திரனின் கல்வியில் அக்கறை கொண்டு வழிகாட்டினார்.

கல்வி நாட்டத்தில் அமரர்:-

அமரரின் ஆரம்பக்கல்வி துன்னாலை காசிநாதர் வித்தியாசாலையில் ஆரம்பமானது. கல்வியிலே மிகவும் திறமைசாலியாகத் திகழ்ந்து தனது இடைநிலைக்கல்வியை இலங்கையில் கீர்த்திபெற்று விளங்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் பயின்றார். அவரது ஒன்றுவிட்ட பாசமிகு சகோதரன் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை அவர்களது முயற்சியின் பயனாக பயின்றார். அவரது வளர்ச்சிக்காலத்தில் தமையனாரின் மேற்பார்வை ஊக்கம் நிறையவே இருந்தது. கல்லூரியில் பயின்ற காலத்தில் அங்கு நல் மாணவனாகத் துலங்கினார். தனது கல்வித் தகைமையினை, மேலும்

வளர்த்துக்கொள்ளும் நோக்கில் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர்கல்வி நிலையத்தில் சிறிது காலம் விடுதியில் தங்கி கல்வி பயின்றார். அங்கு கல்வி பயிலும் காலத்தில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பாடநெறியினை ஆங்கிலமொழி மூலம் பயின்று முதனிலை மாணவனாக விளங்கினார்.

அமரர் கல்விப்புலத்தின் மீதுள்ள ஆர்வம் காரணமாக ஆசிரியப் பதவியினை இலக்காகக் கொண்டு செயற்பட்டார். தனது முப்பதாவது அகவையில் சிரேஷ்ட கல்வித்தராதரப் பத்திர தகைமையினைப் பூர்த்தி செய்து இரண்டு வருடங்கள் (1959-1961) பலாலி ஆசிரியர் கலாசாலையில் கல்வி கற்று தமிழ், ஆங்கில பாடங்களில் பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். ஆசிரிய கலாசாலையில் பயில்கின்ற காலத்தில் இவரது ஆங்கில மொழிப்புலமையை இனங்கண்ட கலாசாலை நிர்வாகம், அங்கு கல்வி கற்றுவந்த ஆசிரிய மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தை மேலதிக நேரத்தில் கற்பிப்பதற்கு நியமித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பயிற்சி முடிவில் யா"தேவரையாளி இந்துக்கல்லூரியில் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றி ஆங்கிலபாடத்தினை மாணவர்களுக்கு வினைத்திறனுடன் கற்பித்து பெருமையடைந்தார்.

இல்லற வாழ்வில் அமரர்:-

அமரர் அவர்களின் இல்லறவாழ்வு அல்வாய் வடக்கில் இலட்சிங்கன் ஒல்லைப் பகுதியில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்த செல்லையா தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரி செல்வேஸ்வரியுடன் 1961.10.12 அவரது திருமணம் ஊர்போற்றும் வகையில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இத்திருமணம் இனிதே நடைபெற அவரது பெற்றோர் மைத்துனர்களான சின்னத்துரை சமூக முன்னோடியான ஆசிரியர் மு.செல்லப்பாக்கியம், சகோதரிகள் மற்றும் உறவுகளின் ஆசீர்வாதமும் ஒத்துழைப்பும் இருந்தது. அமரரின் துணைவியாரின் உறவினர் வழியில் தாய்மாமன்களான க. கதிரவேல் (பவனம்),

க.பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற க.குலசிங்கம் ஆகியோரின் ஊக்குவிப்பு உதவிற்று

இல்லறம் நல்லறத்தில் ஒன்றிணைந்து வள்ளுவர் தம் வாக்கிற்கமைய, தம்பதிகளாக வாழ்ந்து மூன்று ஆண் குழந்தைகளுக்கும், இரண்டுபெண் குழந்தைகளுக்கும் தந்தையாகி அதன் மகிழ்வில் மனம் நிறைந்து வாழ்ந்து வந்தார்.

ஆசிரிய சேவையில் அமரர்:-

அமரர் செ.கணேசன் தனது ஆசிரிய சேவைக் காலத்தில் தன்னிடம் கல்விகற்ற மாணவர்களது நலன்களில் அக்கறை கொண்டவராக விளங்கினார். தன்னிடம் கல்வி பயின்ற மாணவர்களுக்கு உடல்வளர்ச்சிக்கு வைத்தியனாகவும், உளவளர்ச்சிக்கு உளவியலாளனாகவும், உண்மையைத் தேடுவதற்கு சற்குருவாகவும், நல்லவற்றைத்தேடியடைய வழிகாட்டியாகவும் மொத்தத்தில் தனது மாணவர்களுக்கு அனைத்துமாக இருந்து அன்னார் பல்வேறு பட்ட பாடசாலைகளில் கடமையாற்றினார்.

பண்டாரவனை கல்துமுல அ.த.க.பா	1962 - 1967
யாழ்தேவரையாளி இந்துக்கல்லூரி	1968 - 1971
யா/சிறிலங்கா வித்தியாசாலை	1972 - 1985
யா/வதிரிவடக்கு மெ.மி.த.க.பா *யா/திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம்*	*1985 - 1989*
1989ல் சேவையிலிருந்து ஓய்வு பெறல்	
பகுதிநேர ஆங்கில ஆசிரியர்	
யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்	1991 - 1994

அமரர் தான் கடமையாற்றிய பாடசாலைகளில் பாடசாலைச் சமூகத்தின் நன்மதிப்பினைப் பெற்றதுடன் தனது முப்பது வருடகால சேவையில் பாடத்துறை சார்ந்த திறன்களையும், அனுபவங்களையும் நிறைவாகப் பெற்றவராக விளங்கினார். அந்தவகையில், பூரணமான ஆசிரியத்துவத்தை தனது வாழ்வில் கடைப்பிடித்து, அதனை சமூகத்தின் மேம்பாட்டுக்கும் பயன்பெற உதவினார். அத்துடன் எமது சூழலில் எம்மவர் மத்தியில் முதல்முறையாக திகழ்ந்த ஆங்கில ஆசிரியர் என்ற பெருமையையும்

இல்லற வாழ்வில்

பெற்றவர். அதனால் ஆங்கில பாணியிலான நடை, உடை, மனப் பாங்கு கொண்டவராக வாழ்ந்தார். அன்னார் 1977ல் இருந்து 1979ம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் உயர்நீதிமன்றத்தில் யூரர் சபையில் யூரராக பணிபுரிந்தமையும் குறிப்படத்தக்கது. இவர் பலகாலம் மலையகப்பகுதியில் சேவையாற்றியதன் பயனாக சிங்கள மொழியிலும் தேர்வு பெற்று தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும் மொழிகளிலும் சிறந்த புலமையாளனாக விளங்கினார்.

ஆன்மீக சேவையில் அமரர் :-

ஆசிரியர்கள் என்போர் தாம்வாழும் சமூகச்சூழலில் தம்மை இசைவாக்கம் செய்யும் திறன்களைப் பெற்றிருக்க வேண்டுமென்ற இலக்கணத்துக்கமைய அமரர் சமூகம் சார்ந்த பணிகளையும் ஆற்றி வந்துள்ளார். அவரது சமூகப்பணியானது பெரிதும் ஆன்மீகநிலைபபட்டதாகவே இருந்து வந்துள்ளது. சமூகவாழ்வில் உற்றார் உறவினர் அயலவர்களுடன் பண்பாகவும், கௌரவமாகவும் பழகியதுடன், அடுத்தவர் மனம் நோகும்படி அதிர்ந்து பேசாத நல்லெண்ணமுடையவராக வாழ்ந்தமையினால் சமூக ஸ்தாபனங்களில் முக்கியமான பதவிகள் அமரரைத் தேடி வந்தன. வட அல்வையில் எம்மவரின் பண்பாட்டு நிறுவனமாக விளங்கி அருள் பாலித்து வரும் அரசடி விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபையில் நீண்ட காலமாக 1969 - 1988வரை தலைவர், செயலாளர், நிர்வாகசபை உறுப்பினர் என முக்கிய பதவிகளை வகித்து ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டவராகச் செயற்பட்டார். அமரர் 1976ல் தலைவராக இருந்த போது ஆலயம் தர்மசாசனம் செய்யப்பட்டது. அத்துடன் 1988ல் தலைவராக இருந்தபோது ஆலயத்தின் திருப்பணிகள் நிறைவேறி கும்பாபிஷேகமும் கிடைத்த மகுடமாகும். அதனைத்தொடர்ந்த காலப்பகுதியில் ஆலயத்தில் அறநெறிப்பாடசாலை வெள்ளி தோறும் பஜனைகள், சைவசமய வினாவிடைப் போட்டிகள் என்பவற்றை நடாத்தி பரிசில்கள் வழங்கிய இளம் சந்ததியினரை ஆன்மீக வழியில் ஆற்றுப்படுத்தினார். 2006ம் ஆண்டு நடைபெற்ற ஆலயத்தின் இரண்டாவது கும்பாபிஷேக நிகழ்விற்கு முன்பாக பரிவார மூர்த்திகள் மெருகேற்றப்பட்டது. அவ்வேளையில் அமரர் அவர்களால் நாகதாம்பிரான் ஆலயத்தினை நிர்மாணித்து கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

குடும்பவாழ்வில் அமரர்:-

அமரா் தனது குடும்பத்தில் நல்ல தலைவனாகவும், இல்லறவாழ்வில் சுமார் 50 வருடங்கள் நல்ல தந்தையாகவும் வாழ்ந்து தனது உறவுகளுக்கெல்லாம் வழிகாட்டினார். அமரரின் மென்மையான போக்கிற்கமையவே அவருக்கு வாய்த்த மனைவியாரும், மைத்துனர்களான துரைராஜா, செல்வராஜா(மதி), மைத்துனிமாரான திருமதி இராஜேஸ்வரி தங்கத்துரை, திருமதி. யோகேஸ்வரி யோகராஜா அனைவரும் இறுதிவரை உற்றதுணையாக இருந்து அவருக்கு ஆற்ற வேண்டிய பணிகளை நிறைவாகச் செய்தர்.

அமரர் தனது கிரேஷ்ட புத்திரியான பரிமளாவை (முன்னாள் ஆசிரியை யாழ்புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி) புகழ்பூத்த அதிபராக விளங்கிய மூ.சி.சீனித்தம்பியின் புதல்வன் இரவீந்திரன் (கணக்காளர், கொழும்பு) அவர்களுக்கு திருமணம் செய்துவைத்து அகமகிழ்ந்தார். தனது இறுதிக்காலம் வரை அவர்களுடன் வாழ்ந்து பக்க துணையாக இருந்தார்.

சிரேஷ்ட புத்திரன் கிரிதரன் HNDA, BCOM, MCOM ஆசிரியர் (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பகுதிநேர விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்) தனது தந்தைக் கேற்ற தனயனாக ஆசிரிய நியமனம் பெற்று சங்கீதபாட பட்டதாரி ஆசிரியரான கீதமணியை (யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை) கைபிடித்து சிறப்புடன் வாழ்ந்து வருகின்றார். இரண்டாவது மகன் சனாதரன்(இ.போ.ச. ஊழியர்) சுவிற்சர்லாந்துக்கு அனுப்பிவைத்து அவருக்கு ஏற்ற துணைவியாக ஜெசிந்தாதேவியை(முன்னாள் எழுதுவினைஞர் மகாண சபை திருகோணமலை) தேர்ந்தெடுத்து அவர்கள் சுவிற்சர்லாந்தில் சிறப்பாக வாழ்வது கண்டு பெருமிதம் அடைந்தார். இளைய மகள் கோசலா (வெளிவாரிப்பட்டப்படிப்புடன் பொருளாதார அபிவிருத்தி நிறுவணத்தில் கடமையாற்றியவர்) இவரை யாழ்ப்பாணம் கோவிந்தசாமி (செல்லபாக்கியம்) மகன் வேல்நாதனுக்கு மணம் செய்து கொடுத்து மனம் மகிழ்நத்தார். அவர்கள் சுவிற்சர்லாந்தில் சீர்பலபெற்று வாழ்வது கண்டு பேருவகையடைந்தார். இளைய

மகன் வினோதரன் BBA, MPA(Reading), CIMA - Intermediate (கணக்காளர், கொழும்பு) அவர்களை அல்வாய் தெற்குவாழ் ஆசிரியப் பெருந்தகை க.சிவானந்தம் அவர்களது மகள் சுகிர்தாவுக்கு B.A (கணனி இயக்குனர், கொ/பம்பலப்பிட்டி இ.கல்லூரி) மணமுடித்து மகிழ்ந்திருந்தார்.

அன்னாரின் பிள்ளைகளில் குடும்ப வாழ்வியலின் பயனாக கிரிதரன், அமிர்தவர்ஷன், ராகவர்ஷன், சனாதரன் அபிநயா, கோசலா வேல்நாதன் விஷ்மிதன், அர்ஷனன் ஆகிய ஐம்பெரும் பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்வுற்றதுடன் தனது ஓய்வுக்காலத்தில் அவர்தம் மழலைமொழியிலும் திளைத்திருந்தார்.

இறுதியாக அமரர் செ.கணேசன் தனது வாழ்வில் பண்புமிகு கணவனாக, கடமை தவறாத தந்தையாக, பாசமிகு பேரனாக, நல்லாசிரியனாக, கண்ணியமிக்க மனிதனாகப் பல்வேறு பரிமாணங்களில் சமூகப் பாத்திரங்களை ஏற்று, எமது சமூகத்தில் முன்னோடி ஆசிரியர்களின் வரிசையில் கருத்தாலும், செயலாலும் முக்கியமானவராக வாழ்ந்து சென்றார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் அமரர் செல்லையா கணேசன் ஆசிரியர் அவர்கள்

கி.கணேசன்
(ஓய்வு நிலை அதிபர்)

வடமராட்சி தென்பால் அமைந்திருக்கும் துன்னாலைப் பிரதேசத்திலே கல்விவளம் நிறைந்ததும், சைவப்பாரம்பரியத்துடன் வாழ்ந்து வந்த குடும்பங்களில் ஒன்றான காலஞ்சென்ற செல்லையா இலட்சுமி தம்பதியரின் ஏகபுத்திரனாக 1929.05.07ல் பிறந்தவர்தான் அமரர் செல்லையா கணேசன் அவர்கள்.

அமரர் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்து இடைநிலைக்கல்வியிலிருந்து ஆங்கிலமொழிமூலக் கற்கை நெறியினைக் கற்றதனால் ஆங்ககிலக் கல்வியில் நல்ல புலமையாளனாகத் திகழ்ந்தார். அதுவே அவரது வாழ்வியல் நகர்வில் கல்விச்சேவையில் ஆங்கில ஆசிரியராவதற்கு அடித்தளமாக அமைந்தது எனலாம்.

இவ்வாறு ஆங்கிலக் கல்வியை வளமாகப் பெற்றதன் பிரகாரம் 1961இல் ஆங்கில ஆசிரியராக கல்விச் சேவையில் இணைந்து கொண்டார். அத்தோடு அல்வாய் வடக்கு இலட்சிங்கன் ஒல்லையில் வாழ்ந்த காலஞ்சென்ற செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகள் செல்வேஸ்வரி அவர்களை 1961.10.12 இல் திருமணம் செய்து கொண்டார். இத்திருமணத்தினூடாக அன்னார் அல்வாய் வடக்குப் பிரதேசத்தை தனது வதிவிடமாக மாற்றிக் கொண்டார்.

அன்னார் தனது ஆசிரிய சேவையில் தொடர்ச்சியாக 32 ஆண்டுகள் சேவையாற்றியிருந்தார். இதில் ஒருவருடம் தொண்டர் ஆசிரியராகவும், 27 வருடங்கள் தமிழ், ஆங்கில ஆசிரியராகவும் நான்கு வருடங்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியராகவும் அரும்பணியாற்றியுள்ளார். ஆசிரிய சேவைதனில் நல்லாசிரியராகப் பணியாற்றி தான் சார்ந்த சமூகத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், ஏனைய சமூக மாணவர்களின் கல்வி மேம்பாட்டிலும் கால்பதித்து நின்றவர் ஒட்டு மொத்த தமிழ்

சமூகத்தின் கல்வி முன்னேற்றத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்.

அன்னாருடைய ஆசிரியப் பணியில் வெளிமாவட்ட சேவைதனை பண்டாரவளைப் பிரதேசத்தில் பணியாற்றியமையால் சிங்கள மொழியையும் கற்று தேறி அதனை பேசவும், எழுதவும், வாசிக்கவும் ஆற்றல்களை வளர்த்துக்கோண்டார் இதன் பேறாக அன்னார் மும்மொழிப் புலமையுள்ளவராக திகழ்ந்தார்

அன்னாரின் திருமணத் தொடர்பின் நிமிர்த்தமாக அல்வாய் பிரதேசத்தில் இருபது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்தது குறிப்பிடத்தக்கது இந்த காலாப்பகுதியே அன்னாரது பல்துறை சார்ந்த சேவைக்கு களமாக அமைந்தது. எனலாம் இக்காலப்பகுதியில் 13 வருடங்கள் யா/அல்வாய் ஸ்ரீலங்காவித்தியா சாலையிலும்,4 வருடங்கள் யா/தேவரையாளி இந்துக்கல்லூரியிலும், ஒரே காலப்பகுதியில் யா/ வதிரி வடக்கு மெதடிஸ்தமிஷன் பாடசாலையிலும் 5 வருடங்கள் யா/ திக்கம் சித்தி விநாயகா வித்தியாலையத்திலும் ஆசிரியர் பணியை மேற்கொண்டார் இக்காலப்பகுதியில் அன்னார் சமூக சேவையிலும் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் உருவானது தானுண்டு தன் வர்ழ்வுண்டு என நில்லாமல் தன்னாலான பங்களிப்பினை சமூகத்திற்காகவும், அந்த மக்களுக்காகவும் ஆற்ற வேண்டியிருந்தது இது அன்னாரது வாழ்லில் ஓர் திருப்பு முனையாகவும் அமைந்தது

அன்னாரும் அன்னாரது பெற்றோர், குடும்பத்தினர் அனைவருமே சைவப்பாரம்பரியத்துக்கூடாக வாழ்ந்தவர்கள் அந்த வகையில் அன்னார் அரசடி விநாயகர் தேவஸ்தானத்தில் 1969 முதல் 1989 வரையிலான காலப்பகுதியில் பரிபாலன சபையில் தன்னை இணைத்துக் கொண்டு செயலாளராக, தலைவராக, நிர்வாக சபை உறுப்பினராக, அறநெறிப்பாடசாலை மேற்பார்வையாளராக, ஓதுவாராக என பல நிலைகளில் இறை தொண்டாற்றியவர். அன்னாருடைய ஆலயத்தொண்டில் கட்டியம் கூறி நிற்பதாக 1988ம் ஆண்டு அரசடி விநாயகப் பெருமானுக்கு அன்னாரது தலைமையில் முதலாம் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது.

அன்னார் பரிபாலன சபைத் தலைவராக இருந்து ஆலயக்கட்டுமானப் பணிகளுக்கு ஆலய அடியார்களிடம் மட்டுமே நிதி சேகரித்து பெருமுயற்சியினால் முதலாவது கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது என்பது எவராலும் மறக்க முடியாத பெருந்தொண்டாகும், இதன் பேறாக ஆலயத்திலே அற நெறிப்பாடசாலை நடாத்தி மாணவர்களிடையே கூட்டுப்பிரார்த்தனை, பஜனை, சமயப் பேச்சுகள் என்பவற்றை நிகழ்த்தி போட்டிகள் நடாத்தி பரிசில்கள் வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்தி, மாணவர்கள் சமய நெறி நின்று வாழ வழிப்படுத்தியிருந்தமை சிறப்பான கைங்கரியமாகக் கருதிக் கொள்ளலாம்.

கால நகர்வில் அரசடி விநாயகர் தேவஸ்தானத்தில் 2006 ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது கும்பாபிஷேகத்தின் போது அன்னாரது குடும்பம் சார்பாக ஆலய பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாக பிரதிஸ்டை செய்வித்து ஆலயத்திற்கு மேலும் பெருமைதனைச் செய்து கொண்டமை மேலான கைங்கரியமாகும். தேவஸ்தானத்தின் மகோற்சவத்தில் நான்காம்திருவிழா உபயகாரர்களாகவும், தேர்த்திருவிழா உபயகாரர்களாகவும் அன்னாரும் அவரது குடும்பத்தினரும் இருந்து வருகின்றனர்.

அன்னாருடைய இறுதிக்கால வாழ்விடம் கொழும்பில் மகள் பரிமளா குடும்பத்தினருடன் வாழ்ந்தாலும் கூட தேவஸ்தான மகோற்சவகாலங்களில் தேவஸ்தானத்திற்கு வருகை தந்து தான் மனதார நேசித்த அரசடி விநாயகனின் சிறப்பினைத் தரிசிக்கத் தவறுவதில்லை இது கூட அன்னாருக்கு மன நிறைவையும் ஆத்ம திருப்தியையும் அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை, இதன் தொடர்ச்சியாக அன்னார் தான் வாழ்ந்த சூழலில் அமைந்துள்ள இளங்கோ சன சமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து கொண்டு நிலையத்தின் பல்பரிமாண வளர்ச்சிக்கு தன்னாலான பணிகளைச் செய்தவர். பொதுச்சேவையில் தன்னை அர்ப்பணித்து வாழ்கின்றஎவரும் அந்த சமூகத்திலிருந்து அன்னியப் பட்டு நிற்க முடியாது. அதுவும் அன்னாருக்கு விதிவிலக்கானதல்ல.

இவ்வாறு பல்துறை சார்ந்த சேவைதனை ஆற்றி வந்த அன்னார் அவர்கள் நல்ல பண்பானவர், மனித நேயம்மிக்கவர்,

அன்பானவர், எல்லோரையும், அனுசரித்துப் போகின்ற மனப்போக்கினைக் கொண்டவர், உறவுகளை மதிப்பவர் நேசிப்பவர், சராசரி மனித வாழ்வில் இயல்பாக மகனாக, கணவனாக, மருமகனாக, தந்தையாக நின்று தனக்குரிய கடமைகளை செவ்வனே நிறை வேற்றியவர், அந்த வகையில் தனது பிள்ளைகளை நன்றாகப் படிக்கவைத்து அவர்கள் கல்வியிலும், வாழ்விலும் சிறந்தவர்களாக வாழ வழிப்படுத்தியவர். பிள்ளைகளும் தந்தை வழி நின்று தமது வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொண்டவர்கள். சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இதுவே பிள்ளைகள் தம் பெற்றோருக்குச் செய்கின்ற நன்றிக்கடனாக அமைகின்றது.

பிள்ளைகள் அனைவரும் தந்தை வழிநின்று தாம் சார்ந்து நின்ற, நிற்கின்ற சமூகத்திற்காக தங்களாலான பங்களிப்பினைச் செய்து வருகின்றார்கள். இதில் சிறப்பாகக் கூறுவதனால் அன்னாருடைய மகள் திருமதி கோசலா - வேல்நாதன் அவர்கள் யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை பழைய மாணவசங்க சுவிஸ்கிளையில் செயற்குழு உறுப்பினராக இருந்து கொண்டு நிதி சேகரித்து இங்கு ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் நடைபெற்றுவருகின்ற மாலைநேர மேலதிக கற்றல் செயற்பாடுகளுக்கு உதவிவருவது காலத்தால் அழிக்கமுடியாத பெரும் செயற்பாடாகும். இறுதியாக இந்த மண்ணிலே பல்வேறு உறவு முறைகளைத் தாங்கிநின்று 82 வருடங்களுக்கு மேலாக நிறைவான வாழ்வை வாழ்வாங்கு வாழ்ந்து சென்ற 13.12.2011 இல் இறையடி சேர்ந்த அமரர் செல்லையா கணேசன் ஆசிரியர் அவர்களைஇதனூடே தரிசிக்கவும், நினைத்துப்பார்க்கவும், அன்னாரது இளமைக்கால வாழ்வியல் நகர்வில் ஆற்றிய மகோன்னத பங்களிப்பினை மீட்டுப் பார்ப்பதிலும் ஓர் ஆத்மசாந்தி கிடைப்பதாக ஆறுதல் அடைவோமாக.

ஒரு ரயில் பயணத்தில்...............

தெணியான்

வாழ்க்கை என்பது ஒரு ரயில் பயணம் போன்றது. அந்தப் பயணத்தில் பலரைச்சந்திக்கின்றோம். சில சமயங்களில் உணவுவகைகளை ஒருவர்க்கொருவர் பரிமாறி உண்டு மிகழ்கின்றோம். நாங்கள் இறங்கிச் செல்ல வேண்டிய நிலையம் வந்து சேர்ந்ததும் வண்டிதரித்து நிற்கும் பொழுது கீழே இறங்கிச் சென்று விடுகின்றோம். அந்தப் பிரயாணத்தில் நாங்கள் கொண்ட அந்த நட்பும் அத்துடன் அறுந்து போய்விடுகின்றது. ஆனால் மிகச்சிலரின் சந்திப்பினால் உள்ளத்தில் பதிந்துபோன பசுமையான உணர்வுகள் என்றும் நெஞ்சை விட்டு நீங்குவதில்லை. ஒரு நல்லமனிதனின் சந்திப்பு அல்லது சம்பவம் ஒரு ரயில் பயணச் சந்திப்புப் போல இலகுவில் அழிந்து போய் விடக்கூடியதல்ல.

எனது வாழ்க்கைப் பயணத்தில் துன்னாலை செ.கணேசன் ஆசிரியர் அவர்களின் ஒரு நாள் சந்திப்பு எனக்கு நெஞ்சை விட்டு நீங்காத நினைவாக நிலைத்து நிற்கின்றது.

எனது எஸ்.எஸ்.ஸி பரீட்சைப் பெறுபேறு வெளிவந்த காலம் ஆசிரியர் அவர்கள் நெல்லியடி வீதியில் என்னைக் கண்ட போது, தன்னருகே அழைத்து, பாராட்டி, வாழ்த்தி அனுப்பி வைத்தார். அக்காலகட்டத்தில் என்னை வாழ்த்தினவர்களும் பாராட்டினவர்களும் பலர் என்றே கூறவேண்டும். அவர்கள் எல்லோரும் முன்னரே எனக்கு அறிமுகமானவர்களாகவே இருந்தார்கள். ஆனால் ஆசிரியர் அவர்கள் அல்வாய் வடக்கில் திருமணமாகாத காலம்' துன்னாலையில் வாழ்ந்து வந்தார்கள். மாணவனாக இருந்த எனக்கு அவர் அக்காலத்தில் பெருமளவு அறிமுகமான ஒருவராக இருந்துவரவில்லை. அத்தகைய நிலையில் ஆசிரியர்கள் அவர்கள் என்னைக் கண்டு வாழ்த்தியமையும், அவர் நடந்து கொண்ட முறைமையையும், என்னைப் பெரிதும் கவர்ந்தன. அவரது வாழ்த்தும் பாராட்டும் மாத்திரம் இன்றும் எனது நெஞ்சில் நிலையாகப்பதிந்து

கிடக்கின்றது. ஆசிரியர் அவர்களின் அன்றைய சந்திப்பு ஒருநாள் ரயில் பயணமாக முடிந்து போய்விடவில்லை.

நான் கல்வி கற்று முடித்து வெளியேறி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு இரண்டு ஆண்டுகளின் பிறகு ஆசிரிய நியமனம் கிடைத்து மீண்டு வந்து சேர்ந்தபோது கணேசன் ஆசிரியர் அவர்கள் அங்கு ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். நான் ஆசிரிய கலாசாலைக்குச் செல்வதற்கு முன்னுள்ள குறுகிய ஓர் ஆண்டுகாலம்வரை அவருடன் உடன் ஆசிரியராகப் பழகிவாழ சேர்ந்தது. அந்தக்காலகட்டத்தில் கணேசன் ஆசிரியர் அவர்களை நெருக்கமாக அறிந்து, உணர்ந்து, உறவாடி வாழ்ந்திருக்கின்றேன்.

ஆசிரியர் அவர்கள் பழகுவதற்கு இனியவர் ,அதிகம் அலம்பிப்பேசாத ஒருவர், சினந்தறியாச் சீர்மையாளர், சிறந்த பண்பாளர், உள்ளொன்று வைத்து வெளியில் இன்னொன்று பேசாத உயர்ந்த குணமுள்ள உண்மை மனிதர். அவர் போன்ற மனிதர்களை இன்று கண்டு பிடிப்பதாக இருந்தால், சஞ்சீவி பர்வதத்திலுள்ள தாகக்கூறப்பட்ட உயிர் மீட்கும் அபூர்வமான மூலிகையைத் தேடிக்கண்டு பிடித்தது போலாகும் என்றே கூற வேண்டும்.

எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கணேசன் ஆசிரியர் அவர்கள், தமது வாழ்க்கைப் பயணம் என்னும் வண்டியிலிருந்து இறங்க வேண்டிய நிலையம் வந்ததும், பயணத்தை முடித்துக் கொண்டு இறங்கிச் சென்று விட்டார். ஆர்ப்பாட்டமில்லாத அவர் நடத்தைகளும் உயர்ந்த குணமும், நற்பண்புகளும் அவரோடு சேர்ந்து பயணஞ்செய்தவர்கள் நெஞ்சுக்கு அவர் விட்டுபோன அழியாத நினைவுகள் எனலாம் அவைகள் என்றென்றும் வாழும். அவர் பெயரும் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

ஐம்பதுகளின் மும்மொழி ஆளுமையாளன்

கே.ஆர்.திருத்துவராஜா

ஒவ்வொரு மனிதனும் தன்னடக்கமுள்ள ஆரோக்கியமான தேடலினூடாக தாம் பெருகின்ற அடைவுமட்டத்தினோடு சார்ந்து வாழுகின்ற கிராமமும் கிராமத்திற்கான சமூக நிறுவனங்களும் அயற்கிராமத்தினோடு வைத்துக்கொள்கின்ற மனிதனும் நிறைந்த நடவடிக்கைகளுமே தனிமனித வாழ்வியலின் அளவு கோலாக அமையும்.

அவ்வகையினில் அமரர் செல்லையா கணேசன்(ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களது பிறப்பும் திருமணபந்தமும் இரு புலங்களாக கொள்ளப்படுகின்ற துன்னாலை, வட அல்வாய் சார்ந்த நெருக்கமான உறவு பந்தமும் பாலமாக அமைவதோடு அல்வாய் அரசடி விநாயகர் ஆலயத்தின் ஆன்மீக நம்பிக்கையும் ஆலய பூஜைக்குரிய அங்கத்துவமும் இரு புலங்களுக்குரிய நீட்சியான உறவினை பேணுகின்றமை குறிப்பிடத்தக்கது.

துன்னாலை, வடஅல்வாய் புலங்களுக்கான தொடர்புதனை 19ம் நூற்றாண்டினை 19ம் நூற்றாண்டினை கணக்கில் கொண்டு 1910ம் ஆண்டிலிருந்து 1930,32 வரையிலான ஓர் வரையறைக்கான அமரர்களான க.முருகேசு ஆசிரியர் (முருகேசையர்) இச் செய்திக்குரிய அமரர் செல்லையா கணேசன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) இருவரும் துன்னாலை புலத்தினில் பிறந்து தவழ்ந்து நிமிர்ந்தவர்கள் இவர்களோடு வடஅல்வாய் அமரர் வித்துவான் ம.முருகேசு ஆசிரியர்,அமரர் கா.க.கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் (அ) மு.செல்லப்பாக்கியம் எனப்படும் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியின் எம்மவர்க்ககான ஆசான்களாக தினம் அக்காலப்பகுதியில் நிலைகொண்ட சமூகப்பணியும் கல்விப் பணியும் இவர்களால் நிறைவு செய்யப்பட்டிருந்தமை இப்பந்தியில் முக்கியத்துவம் பெறுகின்றன.

அமரர் செ.க.அவர்கள் யா/துன்னாலை காசிநாதர் வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியை பெற்றவர் இடை நிலைக்கல்வியை யா/காட்லிக்கல்லூரியிலும் பெற்றதோடு ஆசிரிய பயிற்சி கலாசாலையில், தேறியவராய் மலையகம் பண்டாரவளை அ.த.க பாடசாலையில் ஆசிரியப்பணியினை ஆரம்பித்து திருமண பந்தமோடு வட அல்வாயை புகுந்த கொண்டிருந்தார். அமரர் அவர்கள் மெலிதான உடல்வாகும் நெடிதுயர்ந்த தோற்றமும் கீழ்த்தொனியில் அமைதியாக உரையாடுகின்ற பண்பிலும், ஆசிரியப்பணியும் அவருக்கோர் மகுடமாக அமைந்தன செ.க. அவர்கள் தாய்மொழி தவிர்ந்த ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் எழுதவும் பேசவும் ஆற்றல் மிக்கவராக திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. மும்மொழியாளனான அமரர் அவர்களின் 1950களின் முன்பின்னாக ஆங்கிலத்திலான செய்தி ஒன்றினை வாசித்தறிவதற்கு விரல்விட்டு எண்ணக்கூடியவர்களுள் ஒருவராக செ.க. அவர்களும் திகழ்ந்தமை.

மலையக ஆசிரியர் பணி நிறைவின் பின் வடபுலம் வடமராட்சியில் யா/தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் யா/அல்வாய் சிறிலங்கா வித்தியாசாலையிலும் யா/திக்கம் த.க.பாடசாலையிலும், மற்றும் யா/வதிரி மிசன் பாடசாலையிலும் பணியாற்றி 1989ல் ஓய்வுபெற்றார். பின்னர் கொழும்பு மாநகரில் வாழுகின்ற சூழல் ஏற்படவே அவ்விடத்தே பல வருடங்கள் வாழ்ந்தே அகவை முதிர்ச்சியும் சிறுக பிடித்த நோயின் தாக்கமும் நிரந்தரமாகவே இமைகளை மூடிகொள்ள வைத்தது. ஆயிரம் பிறைகளை காண்புறும் கால வரவினை காத்திருந்த பெருமகனார் ஆசிரியராய் ஆன்மீக வாதியாய் சமூக பற்றாளனாய் இரு புலங்களுக்கும் பற்றுடைய வலுவான பாலமாய் அமைந்தவர் என்பது அமரரின் வாழ்வுப்பயணம் சமூகத்தில் ஓர் அவர்காலத்து மும்மொழியாளனுக்குரிய சிறப்புக்களாக எமது தொடரில் பதிவாகியிருப்பது நிதர்சனம்.

அப்பா ....

தந்தை வானத்தைப் போல உயர்ந்தவர்
தாயர் பூமியைப் போல பொறுமையுள்ளவர்

எங்கள் அப்பாவும் எங்கள் ஐவருக்கும் உயர்ந்தவராகவே விளங்கினார் நாங்கள் ஐவரும் குழந்தைப் பருவத்திலிருந்தே அதாவது நாம் கதைக்கத் தொடங்கிய காலம் 3 வயதிலிருந்தே கல்வி புகட்ட ஆரம்பித்தார். அதிகாலை 5 மணிக்கே உறக்கத்தில் எழுப்பி Good Morning சொல்லி நித்திரையால் எழுப்புவார். முதலில் தேவாரத்தை சங்கீத ஞானத்துடன் ஆரம்பித்து பின்னர் கணிதம் தமிழ் எழுத்துக்கள் மனக்கணக்குகள், சிறுவர் அபிநயப் பாடல்களை இராகத்துடன் சொல்லித்தருவார். அத்துடன் தமிழ்க்கதைகள் , ஆங்கில எழுத்துக்கள் எண்கள் போன்றவற்றையும் நல்ல பழக்க வழக்கங்கள் நல்ல பண்பான வார்த்தைகள் பெரியவர்களுக்கு கீழ்படிதல், புறங்கூறாமை கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி செய்தல் தானதர்மங்கள் செய்தல் நற்பண்புகளை சிறுவயதிலிருந்து பாடசாலைப் பருவம்வரை சொல்லித் தருவார். மற்றும் ஆங்கிலம் கணித பாடங்களை மிகவும் இலகுவான முறையில் கற்பிப்பார். ஏனைய பாடங்களை எமது மாமா மதியழகன் ஆசிரியரிடமிருந்து விஞ்ஞானம் சுகாதாரப் பாடங்களை படித்தோம்.

அப்பா அம்மாவுக்கு நல்ல கணவனாக, நல்ல அப்பாவாக, பெற்றோருக்கு நல்ல மகனாகவும், சகோதரிகட்கு நல்ல சகோதரனாகவும், சிறந்த மருமகனாகவும், மைத்துனராகவும் அயலவர்க்கு நல்ல உறவினராகவும், யாவருடனும் இன்முகத்துடனராகவும் பழகுவார்.

கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்பதிற்கமைய கற்றவரைக் கண்டால் அவர்களுக்கு அறிவுசார்ந்த விடயங்கள், மேலும் கற்றலுக்கான வழிகாட்டல்களையும் கூறி அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவார்.

அப்பா எங்களை ஆன்மீக வழியில் கந்தசஷ்டி விரதம் பிள்ளையார்கதை, திருவெம்பாவை, சரஸ்வதி பூஜை விரதங்களை அனுஷ்டிப்பதால் இறைவழிபாடுகள் சமயநிகழ்ச்சிகள் பற்றி அனுபவத்தின் மூலம் அறிந்தோம். மார்கழி மாதம் முழுவதும் எமது கோவிலில் அரசடி விநாயகருக்கு தொண்டு செய்வதில் பூரண திருப்த்தியடைந்தார். பிள்ளையார் கதை வாசிப்பு, திருவெம்பாவை பாடல்களையும் பாடி பின்னர் குருக்களுடன் சேர்ந்து பூஜைக்குரிய ஆயத்தங்களையும் செய்து கொடுப்பார். மார்கழிமாத நீண்ட விடுமுறையும் அப்பாவிற்கு தொண்டு செய்வதற்கு அனுகூலமாக அமைந்தது.

அப்பாவின் செயற்பாடுகள் குறைந்த போதிலும் அதிகாலை 4.00 மணிக்கு கோவில் பணி பற்றித்தான் எனக்குச் சொல்லுவார். தன்னுடைய இறுதி மூச்சு வரை கடவுள் சிந்தனையும் பொதுத் தொண்டுடனும் அவர் முழுநிறைவாக வாழ்ந்தார்.

அப்பாவின் குணாதிசயங்களில் மிகவும் பிடித்த குணம் பொறுமை, அப்பா துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவராயிருந்தாலும் வாழ்விடமாகிய அல்வாயையும் மிகவும் நேசித்தார். எல்லோருடனும் அன்பாகப் பழகும் சுபாவமுடையவராக இருந்தமையால் அம்மாவை எப்படி அவரது உறவினர்கள் நேசித்தனரோ. அப்பாவையும் அப்படியே நேசித்தனர். மேலும் யாவரையும் மன்னிக்கும் இயல்பும் உடையவர்.

"இன்னா செய்தாரை உறுத்தல்"
அவர் நாண நன்னயம்

இக்குறளை அஅப்பா எங்களுக்கு அடிக்கடி கூறுவார். அப்பா காட்டிய வழியை நாங்களும் பின்பற்ற வேண்டும். அத்துடன் நன்றி மறவாமையைப் பற்றியும் ஞாபகப்படுத்துவார் தன்னடக்கம் காரணமாக எமது கோவிலில் பற்பல பதவிகளையும் வகித்து முதல் கும்பாபிஷேகத்தையும் அப்பாவின் தலைமையிலே மிகவும் சிறப்பாக நடைபெற்றது அது அப்பாவுக்கு கிடைத்த நற்பாக்கியமாக அமைந்தது.

அப்பா எங்களுடன் கொழும்பில் இருந்த காலத்தில் அம்மாவின் இழப்பு நேர்ந்தது அப்பா மிகவும் மனம் ஒடிந்து போனார். நாங்கள் ஐந்து பிள்ளைகள் இருந்தும் அப்பா ஆறாத சோகத்தில் இருந்தார். அம்மாவின் மரணம் திடீரென மாரடைப்பினால் நிகழ்ந்தது நாங்கள் ஐவரும், அப்பாவும் மீளுவதற்கு பல வருடங்கள் சென்றது. அப்பா இறக்கும் வரை அம்மாவின் நினைவுகளுடனயே வாழ்ந்தார்.

எங்களது வாழ்க்கையும் தொழில் நிமித்தம் காரணமாக கொழும்பில் இருக்க வேண்டியதால் அம்மாவும் அப்பாவும் எங்களுடன் வாழவேண்டியவர்களாயிருந்தனர்.

அப்பாவின் கடைசிக்காலங்களில் மிகவும் அவர் மனதை மகிழ்வுறவைத்த வெளிநாட்டிலுள்ள பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளையும் மூன்று மாதங்களுக்கு முன்னர் வந்து பார்வை இட்டு சென்றமை அவரைத் திருப்தியடைய வைத்தது. அப்பா தான் செய்த புண்ணியங்கள் தனது பிள்ளைகளுக்கு சென்றடைய வேண்டும். என்று எந்நேரமும் பிரார்த்திருப்பார்.

அப்பா கடந்த டிசம்பர் மாதம் 7ம் திகதி அன்றுதான் அம்மாவின் 8வது ஆண்டு நினைவுநாளில் சுகவீனமடைந்து 13.12.2011 செவ்வாய்க்கிழமை அவரது உயிர் இவ்வுலகை விட்டு பிரிந்தது. இதுவும் அப்பா நேசித்த எமது குலதெய்வம் விநாயகரின் பிள்ளையார் கதை 3ம் பூசையில் அன்று பிள்ளையாரின் பாதார விந்தங்களை அடைந்தார்.

Death is Certain

உங்கள்
மகள்
திருமதி.பரிமளா இரவீந்திரன்

அப்பாவும் ...... ஆசானும்

அப்பா உங்களின் பிரிவுத்துயரில் இதயம் கனத்து கண்ணீர் சிந்தும் ஞாபகங்கள்.

வழமைபோலவே எனது கணவர் வேலைக்குச் சென்றுவிட்டார், என் பிள்ளைகள் பாடசாலைக்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் நேரம் என் வீட்டுக் கடிகாரம் 7 மணி 15 நிமிடம் சொல்கிறது.

தொலைபேசிமணி ஒலிக்கின்றது நம்பர் அக்காவின்

வழமையாக இரண்டுமுறை ஒலித்துவிட்டு நின்றுவிடும் திருப்பி நான் எடுப்பதுதான் வழக்கம்.

ஆனால் அன்று வழமைக்குமாறாக ரெலிபோன் மணி ஒலித்துக்கொண்டே இருந்தது

என்ன அக்கா என்றேன் அங்கு வார்த்தைகள் இல்லை.

ஓவென்ற அழுகைச்சத்தம்தான்

அழுகையுடன் அப்பா போயிட்டாரடி........

ஏங்கினேன் தவித்தேன்

அப்பா .... அப்பா .... என புலம்பி அழுதேன் ....

ஏற்றுக்கொள்ளமுடியவில்லை பொய்யாகஇருக்கக்கூடாதா........

என்மனம் இறைவனைவேண்டியது.

உறவுகள் வந்தார்கள் ஆறுதல் தந்தார்கள்

ஆறமுடியவில்லை

ஏன் என்றால் நான் நீங்கள் படைத்த உயிர் அப்பா

உங்கள் இழப்பு உடல் இதயத்தை இழந்ததுபோல் இருந்தது.

உங்களைத்தேடி அடிக்கடி என் குழந்தைகளுடன் தாய்நாட்டிற்கு வருவேன்.

ஆனால் இப்போது.

உங்கள் பேரப்பிள்ளைகள் கேட்கிறார்கள் இனிமேல் தாத்தாவைப்பார்க்கமுடியாதாஎன்று.

அவர்களுக்குப்பதிலளிக்க நீங்கள்தான் வரவேண்டும் .... வருவீர்களா ....?.

அப்பா உங்களுடன் நாம் வாழ்ந்த கால அசைவுகள் எத்தனை சுவை.
அம்மாவும் நீங்களும் இரண்டறக்கலந்த அந்த பொன்னான இல்வாழ்க்கை
பிள்ளைகளாய் நாங்கள் ஐந்துபேர்
நான்காமவள் நான்.
அம்மா சொல்வார் நான் பிறந்து தொட்டிலில் கிடந்தபோது வாரிஎடுத்து முத்தமிட்டு கோசலா என்று பெயர் வைத்ததாக.
அப்பா நீங்கள் அப்பப்பா அப்பம்மாவுக்கு ஒர் ஆண்மகன் ஆகையால் நீங்கள் செல்லப்பிள்ளை.
உங்கள் பிள்ளைகள் ஐவர் நாம் எம்மையும் செல்லமாகவே வளர்த்தீர்கள்.
ஆனாலும் சிறு பராயத்திலிருந்தே அப்பப்போ சிறு கண்டிப்புடன் நல் அறிவுரைகளும் கூறி பண்பாளர்களாக்கினீர்கள்.
நாம் ஐவரும் உங்கள் மாணவர்கள்
எங்கள் வீடுகூட ஒரு காலத்தில் குருகுலம்
பல மாணவர்கள் எங்கள் வீடுதேடி உங்களிடம் ஆங்கிலம் கற்றார்கள்.
ஆங்கிலம் உங்கள் சிறப்புப் பாடம்.
கணிதமும் தமிழும் அதனுடன் PT யிலும் நீங்கள் பாண்டித்தியமானவர்.
எமக்கு பாடக்கல்வியுடன் வாழ்வியல்கல்வியையும் கற்றுத்தந்தீர்கள்.
எம்மை கல்வியில் நிமிர்த்தி ஒழுக்கத்தில் உயர்த்தி இல்லறத்தில் சிறக்கவும் செய்தீர்கள்
உங்கள் பேரக்குழந்தைகள் கல்வியிலும் அக்கறை உள்ள நீங்கள் நாம் உங்கு வரும் போதேல்லாம் அவர்களிற்கு தமிழும் ஆங்கிலமும் தேவாரமும் சொல்லிக்கொடுப்பீர்கள்.
இனி யார் உங்களைப்போல்................
ஆலயப்பணி உங்கள் பொழுதுபோக்கு
அதிகாலை 4மணிக்கே எழுந்து எங்கள் அரசடியானுக்குத் தொண்டு செய்யச் சென்றுவிடுவீர்கள்.
பல ஆண்டுகளாக ஆலயபரிபாலனசபையின் நிர்வாகசபை உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்தீர்கள் எம்மூர்மக்கள்

பலஆண்டுகளாக எப்போது அரசடியான் கும்பாபிசேகம் காண்பார் என ஏங்கியபோது உங்கள் தலைமையில் கும்பாபிஷேகம் சிறப்புற நடந்தது அரசடியான் உங்களோடு எங்களிற்கும் தந்த அருளப்பா. எங்களிற்கு இல்லாவிட்டாலும் முடிந்தளவில் இல்லாத மற்றோருக்குக் கொடுக்கும் கருணை உள்ளம் நீங்கள்.

நீங்கள் விட்டுச் சென்ற ஆசிரியப்பணியும் பொதுச்சேவைகளும் உங்கள் பண்பும் இன்றும் உங்கள் மாணவர்களும் உறவுகளும் நண்பர்களும் பாராட்டும் போது நீங்கள் என்றும் எம்முடன் இருப்பதுபோல் உணர்வு

உங்களிற்குப் பிள்ளைகளாகப் பிறந்ததையிட்டு பெருமைப்படுகின்றோம்.

அப்பா

நீங்கள் எம்மீது கொண்ட அளப்பரிய அன்பும் அறிவுரைகளும் என்றும் எம்மை வழி நடாத்தும்

எங்களுக்குள் உறைந்துவிட்ட நீங்களும் அம்மாவும் எங்கள் தெய்வங்கள் ஆகிவிட்டீர்கள்

ஓய்வடைந்த உங்கள் ஆத்மா சாந்தி பெற உங்களையே வேண்டிநிற்கிறோம் அப்பா................

உங்கள்
மகள் கோசலா
மருமகன் வேல்நாதன்
பேரப்பிள்ளைகள் விஷ்மிதன், அர்ஷனன்

Dearest Grandpa................

You led us towards Light,
Hence we marched with Might,
You always uttered words Right,
So we live and move without Fright,
Dearest Grandpa,
Wisdom and Virtue,
That emanated from You,
Grew as a fine source of inspiration
For us to live a noble life
Your mind was the respository
Of serenity and sagacity
That made us revere you
With honour and dignity forever.
Foundly rememberd
by your affictionate
grand children
Kiritharan Amirthavarshan
Kiritharan Ragavarshan
Sanatharan Abinaya
Velnathan Vishmithan
Velnathan Arshanan

அமரர் அவர்கள் ஓய்வுபெற்ற போது

ஆங்கில வித்தகர்

.க.சிவயோகநாதன்
இயக்குனர் சபை உறுப்பினர்
போதனாவைத்தியசாலை
யாழ்ப்பாணம்

கோபத்தை அடக்கி வாழ்ந்தவன் துறவிக்குச் சமன், என்ற முதியவர் வாக்கிற்கு இலக்கணம் சமர்ப்பித்த பெருமை அவரையே சாரும் 1959ம் ஆண்டில் இருந்து இவருடன் ஒரே வீட்டில், இவர் பிறந்தவீட்டில் இன்றும் வாழ்ந்து வருபவன் என்ற வகையிலும், இவர்தம் நடவடிக்கைகள் பற்றி நன்கு அறிந்தவன் என்ற வகையில் எனது மாமனாரும் இவரது தங்கை திருமதி யோகம்மாவின் கணவருமாகிய அமரர் திரு. மு.செல்லப்பாக்கியம் அதிபர் அவர்தம் குடும்ப சார்பில் அவர் பற்றி சில குறிப்புக்களை வழங்குவதில் சிறிது ஆறுதல் அடைகின்றேன். இவர் தந்தையார் செல்லையா அவர்களை எல்லோரும் "செல்லப்பா" என்று அழைப்பர். இவர் இவ்வூரில் பெயர் பெற்ற செல்வந்தர். சொந்த நிலப்பரப்பைக் கொண்டு நெல்வேளாண்மையுடன் ஏனைய விவசாயச் செய்கைகளிலும், நேரம் தவறாது தொடர் நடவடிக்கைகள் மூலம் ஈடுபட்டு செல்வம் சேர்ந்தவர். இவ்வகையில் பசியுற்றவர்க்கு உணவளித்து தொழிலற்றவர்கட்கு தொழில்வழங்கியும் உதவும் நற்குணமுடையவர்.

அதிகாலையில் எழுந்ததும் அருகில் உள்ள பிள்ளையார் கோயிலுக்கு ஆசாரமாகச் சென்று வந்த பின்தான் தேனீர் அருந்துபவர் சுற்றவர்கள், அயலவர்கள் எவருடனும் எந்தச் சந்தர்ப்பங்களிலும் முரண்பட்டதில்லை, அனைவருடனும் சமாதானமாகவே வாழ்ந்தவர்.

இவ்வாறான நற்குணசீலனாக தந்தையின் ஏக புத்திரன் திரு.செ.கணேசன் அவர்கள், அன்றையகாலத்தில் இப்பகுதியில் அமைந்துள்ள காசிநாதர்வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியில் சிறந்தபெறுபேற்றை அடைந்திருந்தும், சமூகத்தில் பிரபல்யங்களாக இருந்தவர்கள், தகுதியுடைய இவரை ஹாட்லிக்கல்லூரியில் சோந்து கல்விபயில உதவிகள் எதுவும்

செய்யவில்லை. மாறாக தமது குடும்ப உறவினர் பிள்ளைகளைமட்டும் சேர்த்தனர். மனமுடைந்த இவரை ஒன்றுவிட்ட தமையன் அமரர் திரு.சி.கிருஷ்ணபிள்ளை அவர்களே ஹாட்லிக்கல்லூரியில் சேர்ந்தமையை இவர் இறக்கும்வரை பெருமையாகச் சொல்வார். ஒழுக்க விழுமியங்களுக்கும், சமயத் தொண்டுகளுக்கும் உதாரண புருஷனாகத்திகழ்ந்த இவர், எமது வீட்டில் எம்முடன் வாழ்ந்த காலத்தில் தமது மருமக்களான கிருபநாயகி, செல்வநாயகி, பத்மா, கருணா, விமலநாதன், மதனவதி, சுலோசனாவதி, தில்லைநாயகி ஆகியவர்களையும் கடவுள் வழிபாடு, ஒழுக்கம், புறம் சொல்லாமை, தீயவற்றை சிந்திக்காமை போன்ற நற்குணமுடைய மருமக்களாக உருவாக்கியதும் இவரது வழிகாட்டலிலேயே மேலும் அடிக்கடிகூறுவது கூடாநட்புகேடாகும்.

இவரது ஆங்கிலக்கல்வி வழிகாட்டலின் பேறாக ஆங்கில பாடத்தையே முதன்மைப்பாடமாக்கி பேராதனைப் பல்கலைக் கழகம்வரை விமலநாதன், மதனாவதி, சுலோசனாவதி, ஆகியவர்கள் பயில்வதற்கு வழிகாட்டிய பெருமை அமரர் அவர்களையே சாரும். இவரது வழிகாட்டலினால் இவரது பேரமக்களும் (எனது பிள்ளைகளும்) தற்சமயம் ஆங்கிலப்பாடத்தை பட்டப்படிப்பாக்கி தற்சமயம் பயின்று கொண்டுள்ளனர். எனவே இந்த ஆங்கில ஆசானின் வழிகாட்டலின் பேறாக எமது குடும்பம் சிறப்புற்று உள்ளமை கண்கூடு அவரது பிள்ளைகளும் சிறந்த கல்விமான்களாக அவரால் உருவாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களும் தந்தையரைப்போல் எல்லோருக்கும் சிறந்த வழிகாட்டியாய் திகழ வேண்டுமெனவும் அவரது ஆத்மா சாந்தியடைய அவர்தாம் வணங்கிய அல்வாய் வடக்கு அரசடி விநாயகரை பிரார்த்திக்கிறேன்.

வாழ்வாங்கு வாழ்ந்த பெருந்தகை

இ.வன்னியகுலம்
முன்னாள் - ரூபாவாஹினி தொலைக்காட்சி
தகவல் கல்வி தொடர்பாடல நிபுணத்துவ ஆலோசகர்.

அமரர் செ.கணேசன் ஆசிரியரை எனது வாலிபம் பருவமுதல் நான் நன்கறிவேன். அவரது எளிமையான தோற்றமும் இனிமையான இயல்புகளும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. தமது வாழ்நாள் முழுவதும் அவர் புறத்தூய்மையுடன் மட்டுமன்றி சுகத் தூய்மையுடனும் வாழ்ந்துவந்தார். அந்த வாழ்க்கை எல்லோருக்கும் சித்திக்கக்கூடிய ஒரு வாழ்க்கை முறைமையன்று.

எப்பொழுதும் அவர் தூய்மையான ஆடையுடனே காணப்படுவார். எந்நேரமும் அவரது நெற்றியைத் திருநீறு அழகு செய்யும். அவரது சாந்தமான முகமும் வசீகரமான புன்சிரிப்பும் எவரையும் கவர்ந்திழுக்கும். தமது வார்த்தைகள் எவரது மனதையும் செவிகளையும் தாக்கிவிடக்கூடாது என்பதனால் மிக மென்மையாகவே உரையாடுவார். மிகப் கண்டிப்பானதும் தூய்மையானதுமான வாத்தைகளையே அவர் எப்போதும் பயன்படுத்துவார். மற்றவர்களைக் குசலம்விசாரிக்கும் பாணியில் அவர்களது நெஞ்சு குளிர்வடைந்து மனம் இனிமை பெறும்.

தமது குடும்ப வாழ்க்கையில் மட்டுமன்றி பொதுவாழ்க்கையிலும் மிக இனிமையாளராகவே ஈடுபட்டார். பாடசாலையில் மாணவர்களுடன் உரிமை உணர்வோடு பழகிவந்தோர். சக ஆசிரியர்களுடன் முகம்கோணாது நடந்துகொள்வார். அல்வாய் வடக்கு சிறிலங்கா வித்தியாசலையில் அவர் சேவையாற்றிய காலம் மிக அமைதியானதும் எழுச்சிமிக்கதுமான காலப்பகுதி என்பதை யாவருமறிவர். அந்த எழுச்சிக்கு அமரர் கணேசன் ஆசிரியரின் பங்களிப்பும் மிகமுக்கியமானது.

அதுபோலவே அல்வாய்வடக்கு குருக்கட்டு பிள்ளையார் ஆலய பரிபாலன நடவடிக்கைகளிலும் அவர் உள்ளத்தூய்மையோடு செயற்பட்டு வந்தார். கோவிலின் பௌதீக விளக்கங்களைப் பெருக்குவதிலும் பக்தி உணர்வைப் பரப்புவதிலும் அவர் முழுமூச்சுடன் ஈடுபட்டார். இளங்கோ சனசமூகநிலையத்தின் வளர்ச்சியிலே அவர் கண்ணுங்கருத்துமாகச் செயற்பட்டார்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் பாடசாலை, கோவில், சனசமூக நிலையம் என்பவற்றின் பங்குப் பணி குறித்து மிக ஆழமான விளக்கமும் செயலூக்கமும் கொண்டிருந்தார்.

நான் அல்வாய் தெற்கிலிருந்து அல்வாய் வடக்கு மற்றும் பருத்தித்துறைக்குச் செல்லும் வேளைகளிலெல்லாம் அவரது வீட்டைக் கடந்தே செல்வேன். அச் சந்தர்ப்பங்களிலெல்லாம் அவரைக்கண்டு ஓரிருவார்த்தைகளாவது பேசிச் செல்வேன் அவரைக்காணாது செல்லுமிடத்து மனம் பேதலிக்கும் உள்ளம் வலிக்கும்.

அமரர் கணேசன் வடமராட்சி கிராமங்கள் மத்தியிலே ஓர் இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தார். துன்னாலையிலே பிறந்து அல்வாய் வடக்கிலே வாழ்ந்து கொழும்பில் அவர் காலமானார். அன்னாரின் பூதவுடல்கூட இந்தக் கிராமங்களினூடாகவே இறுதிக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்டமை ஒரு சாதாரண நிகழ்வன்று. அனைத்துக்கிராம மக்களுடனும் அவர் போற்றினார். அனைத்துக்கிராம மக்களுடனும் உறவுமுறை பேணுவதில் அவர் என்றும் உயிர்ப்புடன் விளங்கினார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாள் காணப்படும்"

என்றார் வள்ளுவப் பெருந்தகை அமரர். கருணாகரன் அவர்களின் தகைமையை விளங்கிக்கொள்வதற்கு அவரது பிள்ளைகள் சான்றாவர். மிக எளிமையான இனிமையான பண்புகள் நிறைந்த ஆற்றல்வாய்ந்த பிள்ளைகளை அவர் எமது சமூகத்திற்கு விட்டுச்

சென்றிருக்கிறார். அவர்களைக் காணும்பொழுதெல்லாம் அமரர் கணேசனின் நினைவு நெஞ்சை நிறைக்கும்.

அமரர் கணேசன் முழுமையான ஒருவாழ்க்கையை வாழ்ந்து காட்டியுள்ளார். அன்பான மனைவி, அடக்கமான பிள்ளைகள், இனிமையான உறவுகள், எளிமையான வாழ்க்கை முறையென அவரது வாழ்வு பூரணத்துவம் பெற்றுள்ளது.

அன்னாரது ஆன்மா சாந்திபெற எனது குடும்பம் சார்பாக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

பொற்காலத் தலைவர்

அல்வாய் வடக்கின் மூல வேராக மூன்று பொதுஸ்தாபனங்கள் எமது முன்னோரால் உதயமாகியது. முதலாவது வடஅல்வை அரசடி விநாயகர் ஆலயம். ஏறக்குறைய இருநூற்று இருபத்திரண்டு வருடங்களிற்கு முன் மேற்படி ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. 72 வருடங்களிற்கு முன் 1940ம் ஆண்டில் இவ்வாலயத்திற்கென பரிபாலனசபையும் அதற்கான யாப்பு விதிகளும் அமைக்கப்பட்டன. இரண்டாவது ஸ்தாபனம் இளங்கோ சனசமூக நிலையம். இந்நிலையம் 1932ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மூன்றாவது அல்வாய் சிறிலங்கா வித்தியாசாலை இப்பாடசாலை 1953ம் ஆண்டு உதயம் பெற்றது.

எமது சமூகத்தில் அமரர் க.மு.முருகேசு உபாத்தியாயர் அவர்களால், அவரின் 30வது வயதில் ஆலயத்தின் பரிபாலனசபையும், அவரின் 22வது வயதில் இளங்கோ சனசமூக நிலையமும், அமரரின் 43வது வயதில் சிறிலங்கா வித்தியா சாலையும் எமது கிராமத்தில் உதயம் பெற்றது.

எமது கிராமமான அல்வாய் வடக்கில் பல கிளைக்கிராமங்கள் உண்டு. அக்கிளைகளில் ஒன்று துன்னாலை. இத்துன்னாலையில் பணக்காரச் செல்லருக்கு ஒரே ஒரு ஆண்மகனாகப் பிறந்தவர்தான் அமரர் செ.கணேசன் அவர்கள் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, ஆனைப்பந்தி உயர்கல்வி நிலையம் போன்றவற்றில் கல்வியைப் பெற்று, 1961ம் ஆண்டில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் தொண்டர் ஆசிரியராக கடமையேற்றார் இவ்வாண்டிலேயே எமது கிராமத்தில் தனது வாழ்கைத் துணைவியையும் தேடிக்கொண்டார். இவர்களது திருமண நிகழ்வு வெகுசிறப்பாக நடைபெற்றது. இத்திருமணத்தின் பின் எமது கிராமத்தில் தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார். அமரரின் வாழ்கைத் துணைவியின் நற்பலன் காரணமாக அடுத்த வருடம் 1962ம் ஆண்டில்

நிரந்தர ஆசிரிய நியமனத்தினை பண்டாரவளை கல்தமுல்ல அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பெற்றார். சில வருடங்கள் பண்டாரவளையில் கல்விச் சேவையினை தொடர்ந்த பின் மீண்டும் 1968ம் ஆண்டில் தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு மாற்றம் பெற்றார். இக்காலத்தின் பின் அமரரின் சமயத்தொண்டு எம்மூரில் ஆரம்பமாகியது. அமரர் அவர்கள் ஏனைய பொதுச் ஸ்தாபனங்களிலும் பார்க்க எமது ஆலயத்தின் வளர்ச்சியில் தன்னை முற்றாக அர்ப்பணித்தார். 1969ம் ஆண்டில் எமது ஆலய பரிபாலனசபையின் செயலாளராக கடமையைப் பொறுப்பேற்று ஆலய பாலஸ்தாபன நிகழ்வினை 31.10.1969இல் நடாத்தினார். இந்நன்நாளில் 50 அடியார்கட்டு சமய தீட்சையும் வழங்கப்பட்டது. 1970ம் ஆண்டில் தனது செயலாளர் பதவியினூடாக, ஆலய அமைவிடக் காணிகளை உரிமையாளர்களிடமிருந்து தர்மசாசனமாகப் பெற்று ஆலயத்திற்கு உரித்தாக்கிய பெருமை இவரையும் சாரும் இந்நிகழ்வு 13.12.1970இல் நடைபெற்றது. இத்தினத்தில் ஆலயத்திருப்பணி நிதிக்கென பெண்களிற்கு மட்டுமான நிதி சேகரிப்பு வைபவங்கள் இடம் பெற்றது. அமரர் அவர்கள் 1972 முதல் 1978 வரை நிர்வாக சபை உறுப்பினராக தொண்டாற்றி மீண்டும் 1979 நடப்பாண்டிலும் 1986 நடப்பாண்டிலும் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். இக்காலத்தில் மகாமண்டப திருப்பணி வேலைகள் ஆரம்பிக்க வேண்டியிருந்ததால் இரண்டாவது முறையாக பாலஸ்தானம் 1979 ஆவணிச்சதுர்த்தியில் செய்யப்பட்டது.

இரண்டு பாலஸ்தான நிகழ்வுகளும் தர்மசாதன நிகழ்வும், சமயதீட்சை வழங்கிய நிகழ்வும், பெண்கள் நிதிசேகரிப்பு நிகழ்வும் அமரர் செயலாளராக இருந்த காலத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. பாலஸ்தானத்தினூடாக அடையவேண்டிய அதிஉச்சநிலை நிகழ்வான முதலாவது கும்பாபிஷேக நிகழ்வினையும் 1988ம் ஆண்டு தலைவராக இருந்து நிறைவேற்றியமை அமரரிற்கோர் பூர்வபுண்ணிய பலன் என்றே செல்லவேண்டும்.

01.01.1984இல் நடைபெற்ற 43வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் அமரர் அவர்கள் ஆலய பரிபாலன சபையின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். அமரரின் தலைமைத்துவத்திற்கு உறுதுணையாக அடியேனும் செயலாளராக தெரிவு செய்யப்பட்டேன்.

01.01.1984 முதல் 31.30.1990 வரை அமரர் செ.ங்ணேசன் அவர்கள் தலைவராகவும் அவரது வலக்கரமாக செயலாளராகவும் பணிபுரிந்த காரணத்தினால், இக்கால எல்லைக்குள் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வுகளை சுருக்கமாக எழுதவேண்டியது எனது கடமை என கருதுகின்றேன்.

எமது நிர்வாகம் ஆலயத்தைப் பொறுப்பேற்கும் போது பொழிகற்களால் கட்டப்பட்ட கற்பக்கிரகமும் அர்த்த சிற்பக்கலைகள் அடங்கிய தூபி வேலைகளுடன் முருகன் ஆலயம் பொழிகற்களால் கட்டப்பட்ட சுவர்களுடனும் (தூபி வேலைகள் செய்யப்படவில்லை) மட்டுமே திருப்பணி வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தது. எமது ஆலயத்தின் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 23 வருடங்கள் கழிந்த பின்பும் திருப்பணி வேலைகள் முழுமையாக நிறைவு செய்யப்படாது. எம்பெருமானை மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செயயமுடியாத நிலை நிடித்து வந்தது. இத் தாமதத்திற்கு பிரதான காரணி, முழு ஆலய திருப்பணிகளையும் பொழிகற்களால் நிர்மாணிக்க வேண்டும் என்ற எம் முன்னோர்களின் பேரவாவேயாகும் இப்பெரும் பின்டைவை மாற்றியமைத்து மீதித் திருப்பணி வேலைகளை சீமேந்துக் கற்களால் நிர்மாணிப்பெதென முடிவெடுக்கப்பட்டது. இம்முடிவிற்கும் மேலாக, ஒவ்வொரு மண்டபத்தினையும் ஒவ்வொரு குடும்ப ரீதியாக பொறுப்பேற்று திருப்பணி வேலைகளை நிறைவு செய்வதெனவும் முடிவு எடுக்கப்பட்டது. இம் முடிவிற்கமைய அர்த்த மண்டபத்திற்கடுத்த மகாமண்டப வேலை துரிதகதியில் நடைபெற்று வரும் வேளை சபா மண்டப அத்திவாரமும் இடப்பட்டது. எனினும் நாட்டில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலை, போக்குவரத்துக் கஷ்டங்கள் காரணமாக 1985ம்

ஆண்டுவரை வேலைகள் எதிர்பார்த்த இலக்கை அடைய வில்லை எப்படியாவது கூடிய விரைவில் எம்பெருமானின் கும்பாபிஷேக நிகழ்வினை நடாத்தியே ஆகவேண்டும் என்ற அமரரின் தலைமையிலான நிர்வாகம், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட மகாமண்டப திருப்பணி வேலையினையும், புதிதாக ஒரு மடப்பள்ளியினையும் அமைத்து கும்பாபிஷேக நிகழ்வினை 25.06.1986 இல் நடாத்துவதென திட சங்கற்பம் கொண்டது. இப்பெரும் கைங்கரியத்தை நிறைவேற்றும் பொருட்டு, அமரரின் தலமையில் யாழ்ப்பாணம் குருநகர் சென்று, எமது ஆலய அங்கத்தவரான அமரர் சி.நாகமணி அவர்களை சந்தித்து மடப்பள்ளி ஒன்றினை நிர்மாணித்துத் தருமாறு வேண்டினோம்.

அமரர் நாகமணி அவர்களும் தனது பூரண சம்மதத்தினை தந்து எம்மை உற்சாகப்படுத்தினார். அத்துடன் மடப்பள்ளி வேலைகளையும் ஆரம்பித்தார். மகாமண்டப திருப்பணி வேலைகளையும் அமரர் வே.கருணாநிதி அவர்களும் சகோதரர்களும் தொடர்ந்தனர். மேற்படி முன்னேற்றத்தினை கருத்திற் கொண்டு 25.06.1986ல் கும்பாபிஷேக நிகழ்வினை நிறைவு செய்வதென முடிவு எடுக்கப்பட்டது. இம்முடிவானது எமது கிராமத்தில் குறிப்பாக ஆலய அங்கத்தவர்கள் மத்தியில் ஓர் எழுச்சியை ஏற்படுத்தியது. கும்பாபிஷேக நிகழ்விற்கு முன்பாக தங்களது பங்களிப்பையும் வழங்க வேண்டும் என ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொருபகுதி மக்களும் ஆர்வம் செலுத்தலாயினர். இவ் ஆலய வளர்ச்சிக்கு சாதகமாக பயன்படுத்தும் பொருட்டு அமரர் செ.கணேசன் அவர்களின் தலைமையிலான எமது நிர்வாகம் வீடுவீடாக, ஊர் ஊராகச் சென்று சந்தித்தது. பல பொதுக்கூட்டங்களைக் கூட்டி ஆக்க பூர்வமான முடிவுகள் பல எடுக்கப்பட்டன. இதன் பெறுபேறாக சபாமண்டபம், முருகன் ஆலய தூபி வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஸ்தம்ப மண்டபத்தின் இருபகுதிகளும், களஞ்சிய அறை, குருக்கள் அறை, அம்மன் ஆலயம், வைரவர் ஆலயம், வசந்தமண்டபம் ஆகிய திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வேளை எமது ஆலயத்திற்கென ஆலய யாப்பிற்கமைய மீண்டும் திருப்பணிச்சபை ஒன்று உருவாக்கப்பட்டது. கும்பாபிஷேக நிகழ்வு ஐப்பசி 1986 இற்கு பின் போடப்பட்டது. திருப்பணி வேலைகள் துரிதகதியில் நடைபெற்ற வேளை, ஆலய சுற்று மதிலையும் நிர்மாணிக்க வேண்டும் என்ற அவா எம்மில் எழுந்தது. இவ்வாவை முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு,அமரர் செ.கணேசன் அவர்களின் பிறந்த ஊரும், எனது புகுந்த ஊருமாகிய துன்னாலையிலிருந்து இளையோர் மட்டம் சிரமதான மூலம் ஆலய முன்பக்க சுற்று மதிலிற்கான அத்திவாரத்தினை வெட்டி ஆரம்பித்து வைத்தனர். இதனைத் தொடர்ந்து வயல், வண்டியவத்தை, மகாத்தமா இளைஞர் சிரமதான வேலையில் ஈடுபட்டனர். சுற்றுமதில் நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி திருப்பணி வேலைகளை நிறைவு செய்து கொண்டு கும்பாபிஷேகத்தினை நடாத்தலாம் எனும் நம்பிக்கையில் கும்பாபிஷேக தினம் மீண்டும் வைகாசி 1987 இற்கு பிற்போடப்பட்டது.

26.05.1987ல் ஆரம்பிக்கப்பட்ட வடமராட்சி இராணுவ நடவடிக்கை வரை ஆலய திருப்பணி வேலைகள் துரித கதியில் நடைபெற்று வந்தது. நாட்டின் சமனற்ற சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்ததன் பொருட்டு ஆலயச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தது. சில கால இடைவேளயின் பின் 02.04.1988ல் அமரரின் தலைமையிலான நிர்வாகம் மீண்டும் எழுந்தது. திருப்பணி வேலைகள் தொடர்ந்தன. கும்பாபிஷேக நிகழ்வினை நடாத்துவதென முடிவெடுக்கப்பட்டு, சுவர் விளம்பரம் அச்சிடப்பட்டு வெளியடப்பட்டது. சுவர் விளம்பர வெளியீடானது எம்மக்களில் இன்னும் பலரை எழுச்சி கொள்ளவைத்தது. அதன் பயனாக மணிக்கூட்டுக் கோபுரம், வாகனசாலை வசந்த மண்டபம் வாசல் தரிசன மண்டபம், சண்டேஸ்வரர் யாகசாலை ஆலயம் இலக்குமி ஆலயம் என்பன அங்கத்தவர்களால் பொறுப்பேற்றப்பட்டு திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி திருப்பணி வேலைகளையும் நிறைவு செய்த பின் கும்பாபிஷேகத்தினை நடாத்தலாம். என்ற நன்னோக்கில் கும்பாபிஷேக நிகழ்வு மீண்டும் 30.10.1988 இற்கு

பிற்போடப்பட்டது. இத் தருணத்தில், ஆலய மின்விநியோக பொறுப்பினை பிற்போடப்பட்டது. இத்தருணத்தில்,ஆலய மின்விநியோகத் திருப்பணியினை திரு.க.தனபால சிங்கம் அவர்களும், நீர் விநியோக பொறுப்பினை ம.சிறிதரன்தயாவதி தம்பதியினரும் பொறுப்பேற்று செயற்படுத்தலாயினர். மூலவிக்கிரகங்களான விநாயகர், வைரவர், அம்மன் ஆகியவை எமது நீண்ட நாள் பொருளாளராகிய திரு. கோ. சுப்பிரமணியம் அவர்களின் அயரா முயற்சியின் காரணமாக ஏற்கனவே சிற்ப வேலைகள் நிறைவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் சொற்ப நாட்களில் முருகன், வள்ளி, தெய்வானை, சண்டேஸ்வரர் விக்கிரகங்கள் தயார்படுத்தப்பட்டிருந்தது. அமரர் வே. கருணாநிதி அவர்களின் பெரும் முயற்சியும் செல்வாக்கும் காரணமாக இவையும் ஒரு சில நாட்களில் தயாரிக்கப்பட்டது. மேலே கூறப்பட்ட பல முயற்சிகளில் பெறுபேறாக, 31.10.1988ல் அடியார்களில் பக்தி பரவசத்தின் மத்தியில் எமது ஆலய முதலாவது கும்பாபிஷேக நிகழ்வு அமரர் செ.கணேசன் அவர்களின் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது. எமது முன்னோரால் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 27வருடங்களின் பின்னர் கும்பாபிஷேக நிகழ்வு நடைபெற்றுள்ளது.இக்காலம் எமது ஆலயத்தின் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலம் என்றே சொல்லலாம். இப்பொற்காலத்தின் தலைவராக அமரர் இருந்தமை அவரின் நல்மனத்துக்கும், அமைதிக்கும், முயற்சிக்கும் சான்று பகரும்.

இக்காலத்தில் எம்மவர் புலம்பெயர்ந்த வெளிநாடுகளிற்கு செல்லவில்லை. புலம்பெயர் மக்களின் வெளிநாட்டு நிதியுதவி முற்றாகவே இல்லை. முழுக்க முழுக்க உள்நாட்டு உழைப்பின் நிதிவளத்திலும் எம் மக்களின் சிரமதானப் பணிகள் ஒற்றுமையான ஒத்துழைப்பு மூலமும் வளர்ச்சி பெற்றதே எமது ஆலயம். ஆனால் இன்று செல்வத்தில் திளைக்கின்ற எம்மவர் மத்தியில் ஒற்றுமை இல்லை சிரமதானப்பணி அறவே அற்றுவிட்டது. அலசி ஆராய்ந்து

நல்ல கருத்துக்களைக் கிரகிக்கவோ, மற்றவர்க்கு எடுத்துரைக்கவோ இயலாத தன்மை கூடிவருகின்றது. இந் நிலைப்பாடானது எம்மக்களின் வளர்ச்சிக்கு பாரிய தடைக்கல் என்றே சொல்லலாம். மேற்படி கருத்துக்கள் அமரர் அவர்களினால் எனக்குச் சொல்லப்பட்டவை.

கும்பாபிஷேக நிகழ்விற்கு சில நாட்கள் முன் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமரர் அவர்கள் தனது முன்னுரையில் "ஓலைக் கொட்டிலாக இருந்த எமது ஆலயம் கற்கோட்டையாக மாறிவிட்டது." என ஆனந்தப் பரவசத்துடன் கண்ணீர மல்க கூறிய வார்த்தைகள் என் கண்முன்னே நிற்கின்றது. அமரர் அவர்களுடன் ஆலயத்திருப்பணி நிதிக்கென ஊர் ஊராக திரிந்தமை மறக்க முடியாதவை, அல்வாய் தவிர்ந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி, உருத்திபுரம், உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு வற்றாப்பளை, ஆவரங்கால் எனப் பல இடங்களிற்குச் சென்று நிதி திரட்டினோம். 2006ம் ஆண்டு நடைபெற்ற எமது ஆலயத்தின் 2வது கும்பாபிஷேக நிகழ்விற்கு முன்பாக பரிவார மூர்த்திகளின் ஆலயத் தூபிவேலைகள் இந்திய சிற்பாஸ்திரிகள் மூலமாக புது மெருகேற்றப்பட்டது. அவ்வேளை அமரர் அவர்கள் நாகதம்பிரான் ஆலயத்தினை குறுகிய காலத்தில் நிர்மாணித்துத் தந்தமை குறிப்பிடத்தக்கது. எமது ஆலய வருடாந்த உற்சவத்தின் 4ம் திருவிழா உபயகாரராகவும், தேர்த்திருவிழா உபயகாரராகவும் தனது பங்களிப்பினை வருடா வருடம் செய்து வந்துள்ளார்.

அமரர் அவர்கள் இறைவனடி எய்துவதற்கு முன்பாக சென்ற வருடம் எமது ஆலய வருடாந்த உற்சவ நிகழ்வின் போது அமரர் அவர்களிற்கு மாலை அணிவித்து காளாஞ்சி கொடுத்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தமை,அமரரின் இளப்பிற்கும் மத்தியிலும் சிறிது ஆறுதலை தருகின்றது.

அமரர் அவர்கள் இறைபதம் எய்திய பின்னர், அவரின் சரீர உடலை ஆலயத்தில் வைக்க முடியாத நிலையில் இளங்கோ சனசமூக நிலைய மண்டபத்தில் வைத்து இறுதி அஞ்சலி

செலுத்தப்பட்டது. எனது கடமை நிமித்தம் கொழும்பில் நின்ற காரணத்தினால் அமரரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முடியவில்லலை. எனினும் அவர்மேல் நாம் கொண்ட மாண்பு காரணமாக கொழும்பு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அவருக்குரிய இறுதி மரியாதையினை செலுத்த வாய்ப்புக் கிடைத்தமையிட்டு ஆறுதலடைகின்றேன். அமரரின் கபடமில்லாத் தூய மனத்தினை கருத்திற்கொண்டு புதல்வர்களும் சமய, சமூகப் பணிகளில் சமநிலை தளராது அவர் விட்ட பணியினை தொடரவேண்டுகின்றேன்.

இறுதியாக அமரர் அவர்களின் ஆன்மா சாந்திபெற எல்லாம்வல்ல அரசடி ஐங்கரனை துதிப்போமாக

வே.சிவயோகன்
(ஓய்வுபெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளர்)
தலைவர்
பரிபாலனசபை
அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலயம்

நீண்ட பயணம்-ஆனால், மீண்டும் வரவேண்டும்!

காற்றோடு கை குலுக்கி நடந்து வரும் மெல்லிய உயரிய தோற்றம்!

கறுத்த மூக்குக் கண்ணாடியூடாக ...

கண்களின் கூர்மையால் எங்களை!.. கட்டுப்படுத்தும் மெல்லிய பார்வை பார்த்து!..

நீங்கள்!கற்பிக்க வந்த பொழுதுகள் எல்லாம்,..வகுப்பறை கட்டுண்டு நாங்கள் கற்றது..

கணிதம், தமிழ், சுகாதாரம், சமயம், ஆங்கிலம் மட்டுமல்ல!.காந்தியின்ஆண்மீகத்தையும்!

ஆண்மீகத்தின் காந்தியத்தையும்! ஒன்று சேர்த்து ஒற்றுமையாக கற்றுக்கொண்டோம்!

எட்டையபுரகாரனுக்கு பசி வந்த பொழுதெல்லாம்,கூ கூ பாட்டு!- என்று சொல்வீர்கள்.

எங்களுக்கு பசி வந்த போதெல்லாம்,...மந்திரமாவது நீறு! வானவர் மேலது நீறு!

என்று...எத்தனை நீறு பூர்த்த வரிகளை சொல்லித்தந்தீர்கள்!...அத்தனையும் கச்சிதம்!

"சுகாதாரபாடத்தில்" நீங்கள் எங்களை!சுத்தம் பார்க்கும் பொழுதுகளில்.....

நாங்கள் முற்றத்தில் நின்று மழலை வெட்கம் கொண்டோம்.

ஏனென்று,அன்று புரிய வில்லை!ஆனால், இன்று புரிகிறது...

காரணம் "கந்தையானாலும், கசக்கிக் கட்டு"...

என்ற வரிகளின் சொந்தக்காரனை சொல்லித்தந்தீர்கள்..நன்றி!நன்றி!

உடற் பயிற்சி தந்து, ஊருடாக நடைப் பயிற்சி நடாத்தி பல வித்தியாலயங்கள் ...

சென்று போட்டியிட்டு வெற்றியும் பெற்று வந்த பொழுதெலாம்

மகிழ்தோம் ....

மாணவரின் மகிழ்ச்சிதான்,ஆசிரியரின் மகிழ்ச்சியாம்!-உறுதியான உண்மை!

புலத்தில் வாழும் உங்கள் பழைய மாணவர்கள்,உங்கள் பிரிவு கேட்டு...

உங்களை அசை போட்டு ஓரிரு நாட்கள் உங்கள் பிள்ளைகளுடன் புலம்பினோம்.

எமது பாடசாலை,எமது சமூகம், எமது சமூகப் பிள்ளைகளின் கல்வி,அதன் மேம்பாடு கருதி..

எங்களால் தொடங்கப் பட்ட சுவிஸ் பழைய மாணவர்,நலன்விருபிகள் சங்கம்..

சிறப்பாக ஈராண்டில் கால் பதித்து நிற்க, உங்கள் வழி வந்த மகள் வேல்நாதன் கோசலா ..

எங்கள் செயற் குழு உறுப்பினராக இருந்து,இந்த ஈராண்டிலும் தனது நிர்வாகத் திறமையை...

எங்கள் சமூகங்களோடு பகிர்ந்து... எங்கள் சமூக கல்விப் பணி தொடரும் இவ் வேளையில்தான்..

தங்களின் பிரிவுத் துயரம் எங்களை இன்னும் கல்வியின்பால் சிந்திக்கவைத்தது.

"இருந்தும் கல்விதான்,பிரிந்தும் கல்விதான்" என்பதை உங்கள் நினைவோடு நினைந்துருகிறோம்!!!

"நேற்றைய உங்கள் சமூக..கல்விப்பணி,ஆன்மீகப்பணி,நேற்றைய உங்களின் சமூகவாழ்க்கை"!

"இன்றைய உங்கள் பிரிவு, நாளைய எமது பாடசாலையில் ஒரு சமூக வரலாறு!

உண்மையான நேற்றைய மனிதர்கள்!உண்மையான நாளைய மனிதர்களின் வழிகாட்டிகள்!

நீங்கள்!என்றும் எங்கள் ஆசிரியர்!ஆகையால் என்றும் எங்கள் பாடசாலையின் வரலாற்றில்..

நீங்களும் ஒரு மைல்கல்!காலம்,பதிந்து வைத்திருக்கும்,

உங்கள் ஆசிரியப்பணியை!

உங்கள் பிரிவால் துயுறும்,உங்கள் பிள்ளைகள் உறவுகளோடு...

நாங்களும் கலந்து,தங்கள் ஆன்மா! சாந்தியடைய இறைவனை வணங்குகிறோம்.

தங்கள் நினைவுகளுடன் ...
யாழ்/வட அல்வை சிறீலங்கா வித்தியாசாலை,
பழைய மாணவர்,நலன் விரும்பிகள்,
சுவிஸ் கிளை!

சினந்தொரு வார்த்தை அறியோம் என்றும் எமை மறந்தொரு நாளறியோம்
சிரித்தவிழி வதனமுடன் அரசடியான் தேரின் பின்னே தேவார ஓதலுடன்
சீராக எமையெல்லாம் உங்களுடன் பின்னேற்றி ஏற்ற பணி செய்விப்பீர்
மொழி சொல்லித்தந்த அண்புத்தாத்தாவே மீளாவழி சென்றதென்ன

சொல்லறியா சோகங்களுடன்

பேரப்பிள்ளைகளும்	பூட்டப்பிள்ளைகளும்
ப.பார்த்தீபன்	கெ.பர்விதன்
ப.திலீபன்	கெ.பருதிகா
ச.கெங்காதரன்	
கெ.ஷோபனா	

மூன்றாவது தலைமுறையின் முதன்மைக் கல்வியாளர்

திரு. செல்லையா கணேசன் ஆசிரியர் அவர்கள்
ஏ. ஜி. யோகராஜா (சைவம்)

சுமார் 100 ஆண்டுகாலத்தை கடந்து நிற்கும் எமது கல்விப் பாரம்பரியத்தைக்கொண்ட உறவுகளில் மூன்று அல்லது நாலாவது தலைமுறையைச் சேர்தவர் திரு. செல்லையா கணேசன் ஆசிரியர் அவர்கள். இம் மூன்றாவது அல்லது நாலாவது தலைமுறை உறவுகளில் முதன்யையான கல்வியாளராகத் திகழ்தவர் இவர். ஆங்கிலேயர் காலத்தில் இருந்து இன்றும் முதன்மைக் கல்லூரியாகத் திகழ்ந்து வரும் காட்லிக் கல்லூரியில் முதற் கல்விபெற்ற எமது உறவு மாணவர்களாக இவரையும், இவரது தலைமுறையைச் சேர்ந்தவர்களும்தான் எண்ணமுடியும். ஆங்கிலத்தில், ஆங்கிலக் கல்லாரியில் கல்வி பெற்ற இவர், அம் மொழியில் மிகுந்த பரிச்சயமும் பயிற்சியும் பெற்ற சிறந்த ஆங்கில ஆசிரியராக மட்டுமன்றி உயர் பண்பாளராகவும் திகழ்ந்தவர் என்றால் மிகையாகாது.

இவரது குடும்பரீதியான எமது சொந்தத்தைத் தாண்டி, செல்வேஸ்வரி அக்காவை மணம்முடித்த முறைமையில் இவரும் எனக்கு ஓர் அத்தான். ஆனால் நான் ஒருபோதும் அவரை அவ்விதம் அழைத்ததில்லை. உறவுமுறைகளுக்கு அப்பால் ஒருவர் வகிக்கும் பதவியின், பணியின் பெயரால் அவரை அழைப்பதுதான் எமது ஊரின் வழமை. 'வாத்தியார்' 'மணியகாரன்' 'குத்தகைகாரர்' 'மனேச்சர்' 'டொக்ரர்' என்று உதாரணங்களை அடுக்கிச் செல்லலாம். உறவை விட அவர்களது கடமையுணர்வு உயர்ந்திருப்பதன் அடையாளமே இது! அவ்விதமே இவரையும் நாம் கணேசன் மாஸ்ரர் என்றுதான் அழைப்பதுண்டு.

உண்மையைக் கூறின் வெளிநாடு வந்ததன் பின்புதான் நடைமுறை வாழ்வு பற்றிய இவரது பண்பட்ட முறைமையை

என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது. இவரிடம் புதைந்திருக்கும் ஐரோப்பியர்க்குரிய விழுமியங்களை புரிந்துகொள்ள முடிகிறது. இவை எதனையும் அவருக்குரிய ஆங்கில மோகம் என்றோ, அன்றி வெள்ளையரை உயர்வாகக் காண்கின்ற அடிமை மனநிலையின் வெளிப்பாடாகவோ சுருக்கிவிட முடியாது! வெள்ளையரிடம் காணப்பட்ட உயர் விழுமியங்களை எமது கலாச்சாரத்துக்குரிய முறையில் இணைத்துக்கொண்டார் அல்லது பிரயோகித்தார் என்பதே இதன் உள்ளடக்கம். உயர்ந்த தோற்றம்! நிமிர்ந்த பார்வை! புன்னகைத்த முகம்! எந்த ஒரு பிரச்சனையையும் ஆரவாரமற்ற முறையில், நோவின்றி அணுகுகின்ற முறைமை! பல்வகைக் கருத்துக்களுக்கும் இடமளிக்கும் பன்முகச் சிந்தனை! இவை இவரது உயர் பண்பாட்டின் வெளிப்பாடகத் திகழ்ந்தவற்றில் முதன்மையானவை!

ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை சுமார் மூன்றரை இலட்சத்தைத் தாண்டும் என்பது பலரும் அறிந்ததே! ஆனால் இவர்களில் பெரும்பான்மையானவர்கள், யாழ்ப்பாணத்தில் இருந்து பெயர்த்தெடுத்து நாட்டப்பட்ட பூவரசம் மரங்களாகவே வாழ்ந்து வருகின்றனர். வாழும் நாட்டின் சூழல் பற்றிய, கலாச்சாரம் பற்றிய எவ்வித பிரக்ஞையும் அற்று வாழும் எமது இனத்தவர்களின் தொகை இங்கு ஏராளம்.

இங்குதான் இவரது இளைய மகள் கோசலா வேல்நாதன் மிகுந்த கவனத்திற்கு உரியவர் ஆகிறார். சுவிசில் வாழ்ந்துவரும் இவரை இங்கு எனது மருமகள் என்று கூறுவதிலும் எனக்குப் பெருமையுண்டு. எனது பிள்ளைகளுக்கு பாசம்மிகு மச்சாளாக, அக்காவாக, சிலவேளைகளில் தாயாகவும் அவதரித்து வருகிறார். பல்வேறுபட்ட கலாச்சாரத்துக்குரிய பல்வேறு மனிதர்களுடனும் ஏற்றத் தாழ்வுகளைக் கடந்து வேற்றுமையின்றி பழகி வருவது இவரது உயர் பண்புகளில் ஒன்று.

இந்நாட்டின் மொழியினைக் கற்றுக்கொள்வதிலும் ஆர்வமாக உள்ளார். அத்துடன் இந் நாட்டின் கல்விக்கொள்கையை (Pedagogic) அறிந்துகொள்வதிலும் ஆர்வப்படுவதிலும், அதற்கேற்ப

பிள்ளைகளை நெறிப்படுத்துவதிலும் மிகுந்த அக்கறையாக இருப்பதை இலகுவில் கண்டுகொள்ளலாம். இவரது மகன் விஷ்மிதன் உயர்கல்வியைத் தொடர்வதற்குரிய விசேட வகுப்பில் தனது கற்கையை நிலைநிறுத்தி வருகிறார். இவை அனைத்துக்கும் அவரது கணவர் வேல்நாதனின் வழிமுறைகளும் காரணம் என்பதை மறுத்துவிடமுடியாது.

பன்மைக் கலாச்சாரச் சூழலில் வாழும் இவர் அந்தந்தக் கலாச்சாரத்துக்குரிய விழுமியங்களைத் தேர்வதில் திறமையானவராக திகழ்கிறார். குறிப்பாக சுவிஸ் கலாச்சாரங்களின் விழுமியங்களை உள்வாங்கி அதற்கேற்ப தமது வாழ்வியல் நடைமுறைகளைத் தக்கவைப்பதில் சிறந்து விங்குகிறார். உணவு முதல் உளவியல் (Mentality) வரை இதன் மாற்றத்தை இவரிடம் இலகுவில் கண்டுகொள்ளலாம். கொள்கைரீதியிலும், கருத்துமுறையிலும் பல்வேறு நிலைப்பாட்டைக் கொண்ட மனிதர்களின் சிந்தனைகளை அங்கீகரிக்கும் இவரை (கோசலாவை) பன்முகப் பார்வையாளராக இனம் காண்பதில் தவறில்லை. அனைத்துக்கும் மேலாக... கருத்துப் பரிமாற்றங்களின் போது மற்றவர்களை ஆத்திரப்படுத்தாத வகையில் தனது எதிர்வினைகளை முன்வைக்கும் முறைமையை பாராட்டித்தான் ஆகவேண்டும்.

கோசலாவின் இத்தகைய சிறப்பம்சம் எல்லாம் தாய்வழிப் பதிவாக ஆனபோதும், இவற்றின் முழுமை தந்தைவழிவந்த கருவூலத்தின் உறைவுகளில் இருந்து பிறப்பெடுத்தவை என்பதில் ஐயமில்லை!

இத்தகைய உயர் பண்புகளுக்குரிய (கோசலாவும் அவரது சகோதரர்களுமாக) ஐந்து பிள்ளைகளைத் தந்து, எமது சமூகத்தின் உயர் பண்பாளராகத் திகழ்ந்து, தமது 82வது வயது வரை வாழ்ந்த திரு. செல்லையா கணேசன் ஆசிரியர் அவர்களின் ஆத்ம சாந்திக்காக வேண்டுவோமாக!

இளங்கோவின் பார்வையில் அமரர் செல்லையா கணேசன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையமானது 1932ம் ஆண்டு கணபதி படிப்பகம் என்ற பெயரில் இன்றைய அரசடி விநாயகர் ஆலயத்திற்கு அருகில் ஆரம்பமானது.

இக்கணபதி படிப்பகமானது காலத்திற்குக் காலம் விக்கினேஸ்வரர் சனசமூக நிலையம் நேரு நிலையம் இளங்கோ சனசமூக நிலையம் முத்தமிழ் மன்றப் படிப்பகம் எனப் பல்வேறு பெயர்களைத் தாங்கிய வண்ணம் தமது பணியைச் சுமந்து செல்கிறது.

கணபதிப்படிப்பகம் என ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையத்தினது நிர்வாகம் ஒரு காலகட்டத்தில் எமது கிராம ஆசிரியர் குழாத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தவகையில் அமரர்களான வித்துவான் முருகேசு ஆசிரியர், செல்லப்பாக்கியம் ஆசிரியர், கோ.மகாலிங்கம் ஆசிரியர் (மாறாம்புலம்), சி.கணேசமூர்த்தி ஆசிரியர் (மறாம்புலம்) போன்றோர் எமது நிலையத்தைச் சிறப்பாக வழி நடாத்தி வருகின்ற போது அவ்வாசிரியர் குழுவுடன் அமரர் செல்லையா கணேசன் அவர்களும் இணைந்து நின்று செயற்பட்டார். இவர்களது காலத்தில் எமது நிலையம் தீபாவளி விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடாத்தியிருந்தது. எனவே அக்காலத்தில் நிலையத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு அமரர்களது பங்களிப்பும் சாத்திரமானது ஆகும்.

அமரர் அவர்கள் எமது கிராமத்தின் பாடசாலையான அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலையில் சிறந்ததொரு ஆங்கில ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றியது மட்டுமன்றி, பாடசாலைக்கு வெளியேயும் ஆங்கில கல்வியின் மேம்பாட்டிற்காக எடுத்த ஊக்கமும், பணியும், மறக்கத்தக்கதல்ல எமது கிராமத்தில் நடைபெறும் பொது வேலைகளில் முன்னின்று உழைப்பவர்களுள்

ஒருவராகவும் இருந்தார். அந்த வகையில் எமது அரசடி விநாயகர் ஆலயத்தில் அவரது சேவை மகத்தானதாகப் போற்றப்படுகிறது.

இதற்கு மேலாகத் "தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க தனது பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக நல்ல பிள்ளைகளை எச்சமாக விட்டுச் சென்றிருப்பது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

அமரரது பிள்ளைகள் எமது கிராமத்திற்கு வெளியேயும், வெளிநாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருந்தாலும் எமது நிலையத்தின் மீது கொண்ட பற்றினால் இன்றும் எமது நிலையத்துடன் பின்னிப் பிணைந்திருப்பதைக் காண முடிகிறது.

அமரர் அவர்கள் தனது இறுதிக் காலத்தில் கொழும்பில் வாழ்ந்து கொண்டிருந்த போதும் அவரது இறுதி நிகழ்வுகள் எமது கிராமத்தில் நடைபெற்றது. மட்டுமன்றி எமது நிலையத்தில் அவரது பூதவுடல் வைக்கப்பட்டு அஞ்சலியும் செலுத்தப்பட்டது. என்பது எங்கெங்கு எமது நிலையத்வர்கள் வாழ்த்து கொண்டிருந்தாலும் அவர்களை "இளங்கோ" என்ற எமது அன்னை கையேற்றி அணைப்பதற்குத் தயாராகு இருக்கின்றான் என்பதை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. அந்த வகையில் அமரர் செல்லையா கணேசன் அவர்களும் பெரும் பாக்கியம் பெற்றவராகக் காணப்படுகின்றார்.

ஆக்கம் மு. ராஜவரோதயம்
(நிர்வாக உறுப்பினர்)

இளங்கோ ச.ச.நிலையம்
முத்தமிழ் மன்றப் படிப்பினர்

நல்லாசிரியின் நினைவுகளுடன்

வேதநாயகம் தபேந்திரன்
சமூக சேவைகள் உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் - கோப்பாய்

நல்லாசிரியர், நல்ல மனிதர் ஒருவரின் நினைவுகளை இரைமீட்டிப் பார்க்கிறேன். அமரர் செ.கணேசன் எனக்கு உறவு முறை மாமனார். அவர் உரத்துப் பேசி, கோபித்து நடந்ததை என் வாழ்வில் நான் கண்டதேயில்லை. அமைதியும், இனிமையும் கொண்ட பண்பாளர் என் தந்தையார் அமரர் வேலுப்பிள்ளை வேதநாயகம் என்னைச் சிறுபராயம் முதலிலே அல்வாய் மண்ணில் எமது ஊர், உறவுகளின் தரிசிற்பிற்காக அழைத்துச் செல்வார். அப்போதுநான் சந்தித்த நல்பண்பும் ஆற்றலும் வாய்க்கப்பெற்ற மனிதர்களில் ஒருவராக அவரும் இருந்தார்.

உயர்ந்த தோற்றம், தோற்றத்தில் மட்டுமல்ல குணம், ஆற்றலிலும் அவர் உயர்ந்தவர் தான். ஆங்கிலத்தில் அவருக்கிருந்த புலமை மதிப்பிற்குரியது. ஆங்கில மொழியைத் தெளிவாகக் கற்பதுனூடாக சர்வதேச அறிவியல் உலகுடன் எம்மை எமது அல்வாய் வடக்கின் 3கண்களாக அரசடி விநாயகர் ஆலயத்தையும், இளங்கோ சனசமூக நிலையத்தையும், சிறிலங்கா வித்தியாசாலையையும் கூறலாம்.

இந்த முக்கண்களுக்கெல்லாம் தனது காலத்தில் தானும் ஒரு கண்ணாகத் திகழ்ந்தார். தான் வாழ்ந்த கிராமத்திற்குப் பயனுள்ள ஒரு மனிதனாக இறுதிவரை வாழ்ந்தது முன் மாதிரியானது. அப்படி வாழ்ந்த முன்னோர்கள் பலரை அடுத்தடுத்து இழந்து கொண்டு செல்வது தான் கவலைக்குரியது. இவர்களைப் போன்றோரை இன்றைய அவசர இலத்திரனியல் உலகில் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளதும் கவலைக்குரியதே. அமரர் தனது பிள்ளைகள் யாவரையும் தனது ஊர், அயல் ஊர்களில் திருமணம் செய்து கொடுத்ததும் அவரது மண்ணின் மீதான அதீத பற்றைக் காட்டுகிறது. அல்வாய் கிராம மண்ணில் பிறந்தோர் இருக்கும் இடத்திலும், சென்ற இடங்களிலும் சிறப்புற வாழ்கின்ற ரென்றால் இத்தகைய மூத்தோரின் அர்ப்பணிப்புள்ள சேவைகளே காரணமெனலாம் அவ்வழியில் அமரர் செ.கணேசனின் பங்களிப்பும் நினைவுகளும் காலமெல்லாம் நினைவிற்குரியது.

FOR YOUR THOUGHT
ONLY ONE MOTHER

1. Hundreds of stars in the pretty sky,
Hundreds of shells in the shore together,
Hundreds of birds that go singing by,
Hundreds of lambs in the sunny weather.

Hundreds of dew drops to greet the dawn,
Hundreds of bees in the purple clover,
Hundreds of butterflies on the lawn,
But only one mother in the wide world over.

HERE IS GOD

2. God is there,
In the blossom trees.
God is there,
In the gentle breeze.

God is there,
In the grain that grows.
God is there,
In the river that flows.

God is there,
In the rainbow rays.
God is there,
In the child that obeys.

God is there,
In the smiling face.
God is there,
In the every place.

COME LEND YOUR HANDS FOR A WORTHY PURPOSE

3. Come lend you hands
Towalk with us
In putting together
Once again
A nation in pieces

A unity shattered
And
Life in shambles.

WATCH

4. 'W' Watch your Words
'A' Watch your Action
'T' Watch your Thought
'C' Watch your Charactor
'H' Watch your Heart.

5. Help Ever
Hurt Never.

6. The end of knowledge is Love,
The end of culture is Perfection,
The end of wisdom is Liberation,
The end of education is Character.

7. Love grows in
Giving and Forgiving.
Selfishness grows in
Getting and Forgetting

8. Bear all and do nothing,
Hear all and say nothing,
Give all and take nothing,
Serve all and be nothing.

9. Born poor is not our mistake,
But die poor is our mistake.

K.Varshan

அரிய மானிடனாய்............

அரிது அரிது மானிடராதல் அரிது
மானிடராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கி பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது

(அவ்வை)

பெரு மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய, அமரர் திரு. கணேசன் ஆசிரியர் அவர்களுக்கு சாலப்பொருந்தும் வார்த்தைகள் இவை.

எண்பதுகளின் பிற்பட்ட காலப்பகுதியில் ஒரு கொடிய யுத்தத்தின் வடுக்களோடும், தழும்புகளோடும் தேசத்தைப் பிரிய நேர்கையில் மனதினுள் நின்று கனத்த நல்ல மனிதர்களுள் மறக்க முடியாதவர் அமரர், ஆசான் திரு கணேசன் அவர்கள்.அவர் எம்மை பிரிந்தமையானது,துயரத்தை சுமந்தபடி அவர்பற்றிய நினைவுகளை மீள்எழச்செய்கிறது. இறுதிவரை இயல்பான,எளிமையான வாழ்வோடு பயணித்த அவர், ஒரு நல்ல ஆசிரியர்,ஒரு நல்ல குடும்பத்தலைவர், ஒரு நல்ல தந்தை,ஒரு நல்ல உறவினர் இவைகளுக்கு அப்பால் ஒரு நல்ல,நேர்மையான மனிதராய் இறுதிவரை பயணப்பட்டவர்.

அமரர் திரு.கணேசன் ஆசிரியர் அவர்கள் ஏற்றுக்கொண்ட ஆசிரியப்பணியில் சிறப்பாகவே செயற்பட்டவர்., ஆங்கில மொழி போதிக்கும் ஆசிரியர்களுள் அழகிய ஆங்கில மொழியாற்றல் நிறைந்தவர். ஆங்கிலத்தை அழகாக உச்சரிப்பவர்.தன் பணியில் கண்டிப்பும்,அதேநேரம் கனிவும் கொண்ட ஆசான். அப்படிப்பட்ட ஒரு ஆசானிடம் சிறி துகாலம் நானும் மாணவனாகக்கிடைத்தது ஒரு அரிய வாய்ப்பே.

ஒரு ஊர் ,அல்லது ஒரு சமூகம் என்றுவரும்போது நன்றியோடு நினைவுகூரப்படவேண்டியவர். சனசமூகநிலையம், கோவில், பொதுவேலைகள் என்றுவரும்போது நியாயமான விடயங்களுக்கு ஒருபோதும் இடையூறாக இருந்தவரல்ல. ஐந்து பிள்ளைகளைக்கொண்ட அவரது குடும்பத்தின் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அக்கறையோடு உதவிகள் செய்தவர். அதிகம் அலட்டிக்கொள்ளாமலும், அவசியமானவை எதனையும் அலட்சியம்செய்யாமலும் வாழ்ந்த மனிதர். மனிதவாழ்வின் நெறிகளால் நிரம்பிய நிமிர்ந்த மனிதன். அனாவசியங்களை

அவரிடம் பார்த்ததில்லை. குடும்ப வாழ்வின் அர்த்தங்களை உணர்ந்து வாழ்ந்தவர். கடின வார்த்தைகளை அவரிடம் ஒருபோதும் கேட்டதில்லை.எதிலுமே பொறுமை, நிதானம். வறுமைப்பிடியில் வாழ்ந்த காலங்களிலும் செழுமைசேர அழகாக வாழ்ந்தவர்.

அமரர் அவர்கள், அவரது மனைவி காலம்சென்ற திருமதி செல்வேஸ்வரி அவர்களுக்கு ஒரு சிறந்த தலைவனாக வாழ்ந்தவர். தன்னுள் நிறைந்த கல்விச்சிறப்பையும்,சீரான வாழ்வையும் தான் பெற்றெடுத்த பிள்ளைகளுக்கும் கொடுத்து சமூகத்தில் நல்ல மனிதர்களாய் வாழ வழிகாட்டியதால்,தன் பிள்ளைகளை கண்ணியமான உறவுகளாய் எமக்காக விட்டுச்சென்ற மரியாதைக்குரிய மனிதர் அவர்.

எனது சிறு பராயத்திலிருந்தே அமரரின் மூத்தமகன் கிரிதரன் எனக்கு நெருங்கிய நண்பன்,பாடசாலைத் தோழன்.அந்தவகையிலும் அமரர் ஆசான் திரு.கணேசன் அவர்களின் அரிய பண்புகளை அறியக்கூடியதாயிற்று.அதேபோல அவரது ஏனைய பிள்ளைகளும் எனக்குப்பரீட்சயமானவர்கள்.குறிப்பாக மகன் சனாதரன்,மகள் கோசலா வேல்நாதன் ஆகியோர் சுவிற்சலாந்தில் வாழ்வதால் அவர்களுக்கும் எமக்குமான உறவு நெருக்கமானதே. அந்தவகையில் ஒரு நல்ல தந்தையை இழந்து தவிக்கும் அவரது அன்பு பிள்ளைகளுக்கும்,அவரது பேரப்பிள்ளைகளுக்கும்,அவரது குடும்ப உறவினர்களுக்கும்,அமரரின் இழப்பின் இடைவெளியின் துயரத்தை உணர்ந்துகொள்ளும் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த துயரம்கலந்த அனுதாபங்கள். எங்கள் வீதிவழி மிதிவண்டியில் நிமிர்ந்தபடி செல்லும் அந்த மனிதரின் அந்த ஆசானின் சலனமற்ற புன்சிரிப்புடன்கூடிய தலையசைப்பு அடிக்கடி என் கண்முன்னே தோன்றி வலிதந்து மெதுவாய் விலகும்,,,,,

ஆசான் அவர்களே!உங்கள்மீதான நினைவுகளும் என்றும் எம்முள் வீரியமாய்,,,,,,

மானுடராய் மரித்த மனிதரே!உங்களுக்கு எங்கள் மரியாதையோடு கலந்த இதய அஞ்சலிகள்,,,,,,!

சுவிற்சலாந்திலிருந்து,
ம.புதுமைலோலன் (சுதா).குடும்பத்தினர்.

My Beloved Guru

On this occasion, I must say that I am entirely at a loss for words to express how I am deeply shocked by the news of my guru's demise. I am fact, his demise is timely and he has werited his demise by his past good deeds but I cannot accept it because he has not yet finished his excellent English teaching.

English, like all other living languages is full of expression, humour, nuances, shades of mraning phrases and idioms, some of which can never be translated and yet retain there real effect. It was said that the above mentioned aspects always reflected un the quality of his English teaching. I am the field of English teaching. my guru Mr.Ganeshan stoodout like a colossus many him "peers"

The mews of his demise came to me when I was in colombo, like a bolt from the blue. The Unigive privilage and honour of paying the tribute today to my guru the late Mr.Ganeshan has fallen an me and I do it with all humility on geneation of his disciples.

Mr.Ganeshan Sir returned the portals of many schools, college, palaly Training college and University. the remar kuble quality I attribute to my teacher is that his works were not restricted to the narrow confines of his teching profession. He has contributed to the English Literary world remarkcably. He toiled hard above other thing to set exacting standed of acadamic excellence for him self, his children and his disciples and women in evry acadamic endaver in every past us the world from political scientists to otomic beientist who will pay there grateful tributes with one record

Mr.Ganeshan sir, as an English education and as a man letters also set the tone and the calibre for the highhest academic persuits of his diziples he laboured ceaselessly for the bullding up of sound character among his disciples, demonstrated and emphasized sucrificial and hard living.

He taught me perfect English excellently. I Speak English because of his perfect teaching.

In conclusion on behalf I his disciples, my deepest sympathies go to all the affectionate and successful children of late Mr.Ganeshan Sir.

I Pray to god to give peace to the depaited soul and give power to bear this irreparable loss. My profound sympathies to the entire family in this hour of sorrow. I do opine that you should not take this death to heart.

Mayhis soul rest in peace

Samarabhahu,
Valvettiturai.

V.karunanithy
Foemer Director
Advanced Technological
Institute - Jaffna



வேர்களுக்கு விலாசம் உண்டு!
எனது பார்வையில்
அமரர் கணேசன் ஆசிரியர்...

சுவிஸில் நடந்த கவியரங்கம் ஒன்றில் அமரர் கணேசன் ஆசிரியரின் மகள் கோசலாவை நான் கவி பாட அழைத்த போது,...

இவள் எனக்கு மருமகள்
என் ஆங்கில குருமகள்!....
இப்படித்தான் அவளை அழைத்திருந்தேன்.

ஒரு ஆங்கில ஆசானின் மகள் நன்றாக தமிழை பிழிந்து கவியரங்கு மேடையை சிறப்பித்திருந்த போது அதன் அழகை நான் இரசித்ததை விடவும், அவளை சபையேற வைத்த பெற்றோரை எண்ணியே நான் முகமுயர்த்தினேன்.

இதை நினைத்துக்கொண்டே அவர் இறுதியாக வசித்து வந்த அவரது கொழும்பு தெ்கிவளை இல்லத்திற்குள் நான் நுழைந்தேன். அது கடந்த வருட ஆரம்பத்தில்....

சிரித்த முகத்தோடு வரவேற்றார். ஆங்கில தினசரிகள் அவருக்கு முன்பாக பரவிக்கிடந்தன. அதே தோற்றம்,... ஒளி படைத்த கண்களின் கம்பீரப்பார்வை... நடை சற்று தளர்ந்தாலும், இடை விடாது விழுந்த வார்த்தைகளில் தெளிவு...

குசலம் விசாரித்தார்... பேசத்தொடங்கினார். அவருக்கு முன்பாக நான் அன்றுதான் சரியாசனத்தில் உட்கார்ந்திருந்தேன். ஆனாலும் மனதளவில்தயக்க மரியாதையோடு...

படிக்கும் போது அவரை நான் சேர் என்று அழைத்ததும் இல்லை. வீட்டில் அவரை அத்தான் என்று அழைத்ததும் இல்லை.

காரணம் மிகவும் கண்டிப்பான ஓர் ஆசிரியர் அவர்.. கல்வி, ஒழுக்கம், சுகாதாரம், விளையாட்டுத்துறை என்று விரிந்து, சிரமதானம்,

பொதுப்பணி என்ற சமூக அக்கறை குறித்தும் மாணவர்கள் ஆர்வப்படவேண்டும் என கனவு கண்ட ஒரு ஆசான் அவர்.

தன் கனவுகளை நிறைவேற்ற, அவர் எடுத்துக்கொண்ட சிரத்தைகள் யாவும் அவர் என்னோடு பேசிக்கொண்டிருந்த போதே என் ஞாபகங்களில் ஓடி வந்து உட்கார்ந்தன.

மாணவர்கள் நகங்களை வெட்டி சுத்தமாக இருக்க வேண்டும். தலை முடியை காலாச்சார முறைப்படி வெட்டியிருக்க வெண்டும். தவறாமல் குளித்து விட்டு பாடசாலைக்கு வர வேண்டும்.

இவைகளை அவர் உரிய முறைப்படி சோதனையிட்டு பார்ப்பதுண்டு. நான் கண்ட ஆசிரியர்களில் இந்த ஒழுக்க நடைமுறைகளில் இவரைப்போல் கண்டிப்பாக நடந்தவர்கள் வேறு யாரும் இல்லை.

வீட்டுப்பாடம் செய்ய எவ்வளவு நேரம் செலவழிக்கின்றாய்?... வெளியில் விளையாடப்போவதற்கு எவ்வளவு நேரம் செலவழிக்கின்றாய்?.. இந்த கட்டுப்பாடுகள் குறித்து மாணவர்களிடம் கேள்வி எழுப்புவார். வீடு தேடிச்சென்று மாணவர்களின் பெற்றோர்களிடம் முறையிடுவார். பிள்ளைகளில் கவனம் செலுத்துமாறு கனிவாக கேட்பார்.

அமரர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும், சமூக எழுச்சி எழுத்தாளர் தெணியான் ஆசிரியர் அவர்களும் தேவரையாளிச்சமூகம் என்ற ஒரு சொல்லாடலின் ஊடாக எம் சார்ந்த ஒரு சமூகக்குழுமத்தை அடையாளப்படுத்தியருந்தனர்.

அது போல், அல்வாய் என்ற குறுநிலப்பரப்பை மையப்படுத்தி பார்த்தால் சிறீலங்கா வித்தியாசாலை சமூகம் என்ற ஓர் அடையாளத்தையும் நாம் இன்னொரு முகவரியாக கொண்டிருப்பதில் தவறில்லை.
அப்படி நோக்கும்போது, எனக்கு தெரிந்த வகையில் எமது பாடசாலையின் ஸ்தாபகர்களான கந்த முருகேசனார், கவிஞர் மு. செல்லையா, மற்றும் செல்லப்பாய்கியம் ஆசிரியர், அதிபர்

தணிகாசலம், வித்துவான் ம. மருகேசு, கணேசமூர்த்தி ஆசிரியர், திருமதி புண்ணியவதி மகாலிங்கம் ஆசிரியை, கனகரத்தினம் ஆசிரியர், கா. க. கிருஷ்ணபிள்ளை ஆசிரியர், பூவற்கரை கிருஷ்ணபிள்ளை ஆசிரியர், கி. கணேசன் அதிபர், திருமதி குணவதி தேவராசா ஆசிரியை என்று தொடங்கும் பட்டியலில் இன்று அல்வாய் குறநிலப்பரப்பு சார்ந்து புதிய பல ஆசிரியர்களும் அல்வாய் சிறிலாங்கா பாடசாலை சமூகத்திற்கு முகவரிகளாக திகழ்ந்திருக்கின்றனர்.
இன்று அதிபராக இருக்கும் திரு செல்வச்சந்திரன் அவர்கள் கூட இன்னொரு கிராமத்தவராக இருந்த போதும் சிறிலங்கா பாடசாலை சமூகத்தின் வளர்ச்சியோடு இணைத்து பார்க்கப்பட வேண்டியவரே. இதில், அமரர் கணேசன் ஆசிரியர் அவர்கள் பிரதான பங்குதாரர் ஆவார்.

சிறீலங்கா பாடசாலை சமூகத்தின் வளர்ச்சிக்காக அமரர் கணேசன் ஆசிரியர் அவர்கள் ஆற்றிய அர்ப்பணிப்பு என்பது என்றும் அழியாதா பதிவுகளே.

ஆசிரியத்துவம் என்பது மனித சமூகத்தில் முதன்மையானது. ஒரு மனித சமூகத்தில் வகிக்கப்படுகின்ற எந்தவொரு உயர் உத்தியோகத்தராக இருப்பினும், அல்லது ஒரு நாட்டின் ஆளும் சிம்மாசனத்தில் இருப்பவர்களாக இருப்பினும் அவர்கள் யாவரும் யாரோ ஒரு ஆசிரியரை கடந்து வந்தவர்களாகவே இருப்பர்.

அந்த வகையில், அமரர் கணேசன் ஆசிரியர் அவர்களிடம் கற்றவர்கள் பலரும் இன்று பல உயர் பதவிகளை வகித்து வருகின்றார்கள். எல்லைகள் தாண்டி பூமிப்பந்தின் பல்வேறு பரப்புகளெங்கும் தூக்கி வீசப்பட்டிருந்தாலும், எம் கிராமத்தின் புழுதியோடு புதையுண்டிருக்கும்
எங்களது வேர்கள் இன்னமும் அறுபடவில்லை. அந்த வேர்களில் எமது பாடசாலையும், அதில் அமரர் கணேசன் ஆசிரியர் அவரது முகமும் தெரிகிறது.

அமரர் கணேசன் ஆசிரியர் அவர்கள் தான் பெற்ற ஆசிரியத்துவம்

என்ற தொழிலை தனது சமூக அந்தஸ்தாக கருதி ஒருபோதும் செயற்பட்டிருக்கவில்லை என்பதுதான் அவரது சிறப்பியல்பு.

தான் அடைந்த ஆசிரியத்துவம் என்ற உயர் தொழிலை அமரர் கணேசன் ஆசரியர் அவர்கள் ஒரு போதும் துஷ்பிரயோகம் செய்து கொண்டதாக யாரும் · இங்கு கூறிவிட முடியாது.

உச்சிக்கிளையில் சுழன்றுகொண்டிருக்கும் மச்சயந்திரத்தை நோக்கு என்ற உறுதியான இலக்கு போலவே மாணவர்களும் கல்வியை நோக்க வேண்டும் என்பதே அமரர் அவர்களின் பிடிவாதமாக இருந்தது.

எமது சமூகம் கல்விச்சமூகமாக வளர்வதன் ஊடாகவே சமூக ஏற்றத்தாழ்வுகளை உடைத்தெறிந்து முகமுயர்த்த முடியும் என்று அவர் அடிக்கடி எமக்கு கூறும் போதனைகள் எனக்கு ஞாபகம்.

ஆனாலும் அவர் அக்கம் பக்கம் பார் என்று கூறவும் மறுக்கவில்லை. மாணவர்களே வகுப்றையை விட்டு வெளியே வாருங்கள்!. நீங்கள் தேடும் வினாக்களுக்கான விடைகள் இந்த சமூகத்திலும் உண்டு. அதை தேடிப்பபாருங்கள் என்று அவர் தத்துவங்கள் பேசியிருக்காவிடினும்,

நாம் மாணவ சமுதாயாமாக இருந்த போது முன்னெடுத்த சமூக அக்கறைகளுக்கு ஆதரவு தந்தவர். எமக்கு ஆசிரியராக மட்டுமன்றி சிறந்த ஆலோசகராகவும் இருந்தவர்.

எமது சன சமூக நிலையம், அதன் விளையாட்டுத்திடல், நாம் கற்ற பாடசாலை, எமது ஆலயம் என்று எங்கு பார்த்தாலும் அவரது உழைப்பும் எமது மண்ணில் சிந்தப்பட்டிருக்கிறது.

எம்மூர் அரசடி வினாயகர் ஆலயத்தில் அவர் தலைவராக இருந்த போது ஆற்றிய அர்ப்பணங்கள் அதிகம். குறிப்பாக ஆலயத்திற்கான நிலப்பரப்பில் ஒரு பகுதியேனும் தர்மசாசனமாக எழுதப்பட்டது

அவரது தலைமைக்காலத்திலேயே என்பது அவரது ஆன்மீகப் பணியின் சிறப்பாகும்.

அதற்கு பிந்திய காலத்திலும், ஆலயப்பணிகளில் ஈடுபட வருமாறு அவர் எம்மை அழைத்து எம்மை வியர்வை சிந்த வைத்ததில் அவருக்கும் பங்குண்டு.

தனது பிள்ளைகள் மட்டும் கல்வியில் சிறந்து துலங்க வேண்டும் என்றுஅவர் ஒரு போதும் எண்ணியிருந்ததில்லை. தம் பிள்ளைகள் போல் பிறர் பிள்ளைகளையும் அவர் நேசித்தார் என்பது வெறும் ஒப்பாசாரத்திற்கு எழுதும் வரிகள் அல்ல.

எமது நரம்புகளில் ஓடுகின்ற இரத்தம் அவரது பிரம்படி பட்டவைகள். அந்த இரத்தத்திலும் தசையிலும் தான் அவரிடம் படித்த மாணவர்களின் விழிப்புணர்வும், ஆற்றலும், ஒழுக்கமும், கட்டுப்பாடும் விளைந்திருக்கின்றது.

உறைந்து கிடந்த என் ஞாகங்களுக்கு தீ மூட்டிக்கொண்டே அவரது கொழும்பு தெகிவளை இல்லத்தில் அவரோடு பேசிக்கொண்டிருந்தேன்.

நான் அவர் குறித்த ஒரு சமூக மதிப்பீட்டடை கொண்டிருப்பது போலலே அவரது உரையாடல்களும் இருந்தது.

தனது பிள்ளைகள் குறித்த சொந்த நலன்களில் அக்கறை காட்டாமல் கோசலாவும் சனாவும் எம்மூர் பாடசாலைக்கு, கோயிலுக்கு, வாசிகசாலைக்கு சேவைகள் செய்ய வேண்டும். இதை அவர்களிடம் கட்டாயமாக சொல்லி விடு என்று அவர் என்னிடம் சொன்னார்.

இளங்கோ சன சமூக நிலையத்தின் பொது நோக்கு மண்டபம் குறித்து வினாவிய அவர்,.... தம்பி!.... அரசடி வினாயகர் ஆலயத்தின் அன்னாதான மண்டபம் எப்படி உள்ளது, முன் மண்டபம் எத்தனை அடி நீளத்தில் உள்ளது?...

யாருக்காவது இப்போதே தொடர்பு கொண்டு கேட்டுப்பார் என்று அவர் தனது உடல் நிலையையும் பொருட்படுத்தமால் என்னோடு அடம் பிடித்து நின்ற அவரது உணர்வுகளில் ஒரு சமூக அக்கறையே தெரிந்தது.

அவரை சந்தித்திருந்தது பெரும் பாய்க்கியம் என்ற உணர்வோடு நான் அவரிடம் சில வார்த்தைகளை பேசியிருந்தேன்.

நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் எண்ணம் போலவே உங்கள் பிள்ளைகளும் செயற்படுகின்றார்கள். கால மாற்றத்தில் இன்னமும் அதை விட உயர்ந்து....

இப்படி நான் கூறிய போது அவரது கண்கள் கரைந்து துளிகள் சிந்தின. அது தன் கனவுகள் மெய்ப்படுகின்றன என்ற அவரது உணர்வுகளின் வெளிப்பாடு.

நன்மை செய்யாவிடினும், தீமையாவது செய்யாதிரு என்று கூறுவார்கள். தீமை ஏதும் அவர் செய்ததாக யாரும் சொல்ல முடியாது. அது அவரது வாழ்வின் சிறப்பு. நன்மைகளே புரிந்தார் என்பதற்கு அவரது வாழ்வியலே சிறந்த சாட்சியம்.

அல்வாய் கிராமத்தவர்களுக்கு ஒரு சிறப்பியல்பு உண்டு. வாழும்போது சேவை மனிதர்களை கௌரவிப்பதே அதுவாகும். அது அமரர் கந்த முருகேசனார் அவர்களது பவளவிழா ஊடாக மெய்ப்பிக்கப்பட்டது.

அமரர் கந்த முருகேசனார் அவர்களது சமூக சேவையின் கனதி மாறுபட்டதாக இருப்பினும், அமரர் கணேசன் ஆசிரியர் அவர்களையும் உயிரோடு இருக்கும் போது ஏதோ வகையில் கௌரவிப்பதற்கான சூழல்கள் கனிந்திருந்தன. ஆனாலும், அந்த சந்தர்ப்பம் ஏதோ காரணங்களுக்காக தவற விடப்பட்டுள்ளது.இது அமரர் கணேசன் ஆசிரியர் அவர்களது இழப்பை விடவும் ஆழ்ந்த துயரம்.

ஆனாலும், அவர் நடந்து திரிந்த எமது கிராமத்தின் ஊடாக அவரது பொன்னுடல் போகும் போது அவரது பூம்பாதங்களுக்கு எம்மூர் மக்கள் பூக்கள் தூவி மரியாதை செலுத்தி வழியனுப்பி வைத்திருக்கிறார்கள். இது போதும்.

அமரர் அவர்கள் தனது ஆசிரியத்துவம் என்ற சேவைத்தொழிலை ஏற்ற காலம் மாறுபட்ட ஒரு சூழல்.

மத மாற்றங்கள்தான் அப்போது உத்தியோகங்களுக்கு முதலிடம் கொடுத்தன. அந்த சூழலில் அந்த வாய்ப்பை பெறுவது தவறு என்று சொல்லி விட முடியாவிடினும், தனது ஆற்றலால் மட்டும் ஆரிசியத்துவம் என்ற சேவையை எட்டிப்பிடித்த அமரர் கணேசன் ஆசிரியர் அவர்களுக்கு என் முதல் மரியாதை.

விளம்பரம் செய்யாமல் தனது ஆசிரியத்துவம் என்ற உயர் பதவியை எமது கல்விச்சமூகத்தின் வளர்ச்சிக்காவும், கிராம முன்னேற்றத்தின் உயர்ச்சிக்காகவும் தன்னை அர்ப்பணித்த அமரர் கணேசன் ஆசிரியர் அவர்களுக்கு எமது
இறுதி மரியாதை!,..

நான் அவரை அவரது கொழும்பு இல்லத்தில் சந்தித்து விட்டு விடை பெற்ற போது இதுதான் எனது இறுதிச்சந்திப்பாக இருக்கும் என்று நான் நினைத்திருக்கவேயில்லை.

விருட்சங்களுக்கும், கிளைகளுக்கும், இலைகளுக்கும் முகவரி வெளிப்படையாகவே உண்டு. ஆனாலும் அதன் வேர்களுக்கான முகவரியை தேடித்தான் பார்க்க வேண்டும்.

தேடிக்கண்டு கொண்டேன்,......

இறுதி மரியாதையோடு
செல்லத்தம்பி இலட்சுமி சிவச்செல்வம்.
சுவிஸிலிருந்து....

அகப்பூ அஞ்சலி

"நிறை மொழி மாதர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்" குறளுக்குத் தக கபடம் தெரியாது நடைபயின்ற மனிதம் தடம் பதித்து மாணவ மணிகளை தந்த ஆசான் திடம் கொண்ட மனத்துடன் வ்லம் வந்த ஆசான் திடம் கொண்ட மனத்துடன் வலம் வந்த பெருந்தகை உடல் நலம்தளர்ந்த செய்தி கேட்டு நாம் கடவுளிடம் நலம் பெற வேண்டி நின்றோம் விதி விடம் கொண்ட கண்டன் திருவடிக்கு அழைத்ததோ பாசம் கொண்டு நாளும் பழகிய பண்பாளன் வாசம் கொண்டு உறவாடி வழி நடத்தியவர் பேசிடும் வார்த்தைகள் உள்ளத்தை நிறைக்க வீசிடும் காற்றோடு உந்தன் உயிர் கலந்தோ நித்தம் உன் நினைவில் வாழும் உறவுகள் சித்தம் தெளிவு பெறும் காலம் உறவுகள் சித்தம் தெளிவு பெறும் காலம் உருவாகி உத்தமன் உன் உரு உள்ளமதில் உறைய அத்தன் அடியில் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம் குருக்கட்டு விநாயகனை.

வே.செல்வயோகநாதன் - (சுவிஸ்)
இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகத்தர்.

இடைநிலைக் கல்வியில் தராதரம் பற்றிய எழுவினாக்கள்

பேராசிரியர் கலாநிதி மா கருணாநிதி

இலங்கையின் கல்வி முறைமையில் 1945 தொடக்கம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள சீர்திருத்தங்களும் அவற்றின் நடைமுறைப்படுத்தல்களும் கல்வியின் தெகைசார் அபிவிருத்தியில் பல சாதகமான அபிவிருத்திகளை எடுத்துகாட்டி வந்துள்ளன. பாடசாலைகளின் தொகை (9716), மாணவர் தொகை (ஏறக்குறைய 3.8 மில்லியன்), ஆசிரியர் தொகை (208,000), எழுத்தறிவுடையோர் தொகை (91.7%), ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்வோர் தொகை (98%), இடைநிலைக் கல்வியைப் பூர்த்தி செய்வோர் தொகை (85%) முதலிய விடயங்களில் மிகச் சிறந்த வெற்றிகளை ஈட்டியுள்ளது. கல்வியமைச்சினால் வருடந்தோறும் வெளியிடப்படும் அறிக்கைகள் இச்சாதனைகளை எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன. ஆயினும் எமது கல்விமுறை பற்றிய முக்கியமான எழுவினாவாக கல்வியின் தராதர மேம்பாடு குறிப்பிடத்தக்க விதத்தில் இல்லாமையைக் குறிப்பிடலாம். தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கையும் (NEC, 2003) கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகமும் நிகழ்ச்சித்திட்டமும் (ESDFP,2006) கல்வித்தராதர மேம்பாடு பற்றிய விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் தெளிவாகத் தந்தள்ளன. 2007இல் கல்வியமைச்சும் பெரும் முன்னெடுப்பில் தராதர அபிவிருத்தி தொடர்பாக பல்கலைக் கழகங்களிலுள்ள கல்விப்பீடங்கள் மற்றும் கல்வித் திணைக்களங்களின் துணையுடன் தேசிய மட்டத்திலான மகாநாடொன்றினை பின்வரும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு நடத்தியது.

1. பாடசாலைகளின் தராதர மேம்பாடு
2. கற்றல் அடைவுகளை மேம்படுத்துதல்
3. பொதுச் சோதனைகளில் மாணவரின் வினையாற்றலை உறுதிசெய்தல்

4. தராதர மேம்பாடு குறித்து மேற்பார்வை கண்காணிப்பு என்பவற்றைத் திசை முகப்படுத்தல்
5. கல்வியில் சமவாய்ப்பினை உறுதிப்படுத்தும் நோக்கில் வேறுபாடுகளைக் குறைத்தல்
6. பாசாலைக் கலைத்திட்டத்தை மீளாய்வு செய்தல்
7. ஆசிரியரின் உயர்தொழில்சார் தேர்ச்சிகளை மேம்படுத்துதல்

இம்மகாநாட்டில் கல்வியின் தராதர மேம்பாடு குறித்துப் பல ஆணித்தரமான கருத்துகள் பரிமாறப்பட்டன. ஆயினும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பெரிதும் அக்கறை காட்டப்படவில்லை. இக்கட்டுரையானது மேலே குறிக்கப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் கலந்துரையாடாமல் பாடசாலைகளில் வசதிகளும் வளங்களும், ஆசிரியர் தொழில்சார் அபிவிருத்தி, பாடசாலைக் கலைத்திட்டத்துடன் தொடர்புடைய எழுவினாக்கள், கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பிடல் தராதரமின்மை மற்றும் பாடசாலை முகாமைத்துவம் பற்றிய முக்கியமான விடயங்களில் கவனஞ் செலுத்தியுள்ளது.

பாடசாலை வளங்களும் வசதிகளும்

முதலாவது எழுவினாவான பாடசாலை வளங்களும் வசதிகளும் பற்றி ஆராயும் பொழுது, பாடசாலைகளிடையில் காணப்படும் வளவேறுபாடுகள் அல்லது வளப் பகிர்வில் சமநிலையின்மை நீண்டகாலமாகக் கொள்கை வகுப்போர் மற்றும் நடைமுறைப்படுத்துவோரின் கவனத்துக்கு உட்பட்டிருந்தது எனினும் இன்றுவரையில் வளப்பகிர்வு தொடர்புடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாத ஒன்றாக இருந்து வருகின்றமை எல்லோராலும் நன்கு அறியப்பட்ட விடயமாகும். இத்தகைய வேறுபாடுகள் நகர மற்றும் கிராமப் பாடசாலைகளிடையில் நிலவுகின்றன என்ற பொதுவான நோக்கிலன்றி தற்போதைய சூழமைவில் கிராமப் பாடசாலைகளுக்கிடையில் நிலவுவதையும் உற்றுக் கவனித்தல் வேண்டும். கிராமப் பாடசாலைகளில் அத்தியாவசியமான வளங்கள் பற்றாக்குறையாக உள்ளன. வசதிபடைத்த பாடசாலைகளில்கூட வளங்களைப் பகிர்வதில் முன்னுரிமைகளில் தவறான நெறிப்படுத்தல்கள் உள்ளன என்பதனை தேசிய கல்வி ஆராய்ச்சி

மதிப்பீட்டு நிலையம் (NERC, 2003) மேற்கொண்ட ஆய்வு வெளிப்படுத்தியள்ளது. .

இலங்கையில் தேசியப்பாடசாலைகளென அழைக்கப்படுபவை ஒப்பீட்டளவில் வளவசதிகளைக் கொண்டவை என்பது எமது பொதுவான நம்பிக்கை. இன்று தேசியப்பாடசாலைகள் உருவாக்கப்பட்டுள்ள முறையில் வளம் மற்றும் வசதிகள் என்ற விடயம் பெரிதும் கவனத்திற்கு உட்படவில்லையென அவதானிக்கலாம். பல தேசியப் பாடசாலைகள் ஆகக்குறைந்த தராதரங்களைப் பேணுதற்குரிய வளங்களின்றி பெயரளவில் தேசியப் பாடசாலைகளாக இயங்கி வருகின்றன. பாடசாலைக்கான அடிப்படை வசதி என்னும் பொழுது, பொதுவான உட்கட்டுமான வசதிகளான வகுப்பறை, பாதுகாப்பான குடிநீர், சுத்தமான பாடசாலைச் சூழல், மின்சார வசதி, மாணவருக்கான மேசை மற்றும் கதிரைகள் பற்றியே கூறிவருகின்றோம். வளங்களைப் பொருத்தமற்ற விதத்தில் பயன்படுத்தும் பொழுது வீண் விரயங்களுக்கும் செலவு நன்மையில்லாத நிலைமைக்கும் வழிகோலுதல் ஒரு பாரிய பிரச்சினையாகும்.

மனிதவளம் என்ற வகையில் முக்கியமான வளமான ஆசிரியர்தொகை அதிகமாக இருந்தாலும் முதலில் தொகை அடிப்படையிலும் பாட அடிப்படையிலும் மாகாணங்களுக்கிடையில் மிகையும் பற்றாக்குறையும் நிலவுகிறது என கல்வியமைச்சின் அறிக்கை எடுத்துக்காட்டியுள்ளது (ESDFP, 2006).

இலங்கையில் மாணவர் ஆசிரியர் விகிதம் 20 : 1 ஆக இருக்கின்ற போதும் கற்றல் கற்பித்தல் சிறந்த முறையில் நிகழவில்லை. ஆங்கிலம், ஆங்கில இலக்கியம், கணிதம், தொழிநுட்பம், உடற்கல்வி மற்றும் விசேட கல்வி ஆசிரியர் தேவைகளைப் பூர்த்திசெய்தல் இதுவரையில் சரியாகக் கவனிக்கப்படவில்லை தமிழ்மொழிப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் ஆசிரியரின்மை பாதகமான விளைவுகளுக்குக் காரணமாக இருக்கின்றமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். முறைசார் கல்வியின் தராதரமானது, ஆசிரியர்களின் தராதரம் மற்றும் செயலாற்றங்களில் தங்கியுள்ளது. ஆசிரியர் ஆட்சேர்ப்பு நியதிகளின்படி

ஏற்படுகின்ற மாற்றங்களைச் சரிவர உள்வாங்கிக் கொள்ளாமல் சீர்திருத்தங்கள் எழுந்தமானப் போக்கில் அவசரமாக மேற்கொள்ளப்படுதலாகும். இலங்கையில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட கலைத்திட்டச் சீர்திருத்தங்களில் 1972 இல் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம் முக்கியமானது. ஆயினும் அச்சீர்திருத்தத்தில் முன்மொழியப்பட் விடயங்கள் பல வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின்னர் வந்த சீர்திருத்தங்கள் அதனை அடியொற்றிச் சில மாற்றங்களுடன் அறிமுகமாயின. கலைத்திட்டச் சீர்திருத்தங்கள் நிச்சயமாக இடம்பெற வேண்டியவை ஆயினும் அதற்கென ஒரு கால வட்டம் உள்ளது. இங்கு அவ்வட்டம் முறையாகப் பின்பற்றப்படாமல் அநேகமான சந்தர்ப்பங்களில் ஒரு சீர்திருத்தம் இடம்பெற்று, அதனை நடைமுறைப்படுத்தி, அதன் வெற்றி தோல்விகளை பலாபலன்களை அறியமுன்பே மற்றொன்று புகுத்தப்படுகின்றமையால் ஆசிரியரும் மாணவரும் எண்ணற்ற பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர்.

ஒரு கலைத்திட்டத்தைப் புதிதாக அறிமுகம் செய்யும்போது, அதனை நடைமுறைப்படுத்துவதற்குப் போதிய பயிற்றப்பட்ட ஆளணிவளம் மற்றும் சாதனங்கள். கலைத்திட்டத்தை முகாமைத்துவம் செய்யக்கூடிய தலைமைத்துவம் தொடர்பாகப் பெரிதும் க்வனத்தில் கொள்ளப்படுவதில்லை. உதரணமாக தொழில் முன்னிலைப் பாடங்கள், வாழ்க்கைத் தேர்ச்சி பாடசாலைத் தளநிலைக் கணிப்பீடுகள் அறிமுகம் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் இத்தகைய பிரச்சினைகள் பெரும் சவாலாக இருந்தன. பாடசாலைத் தளநிலைக் கணிப்பீடு (1998) அறிமுகஞ் செய்யப்பட்ட ஏறக்குறைய 12 ஆண்டுகள் முடிவடைந்துவிட்ட நிலையிலும் இதனை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளுக்குச் சரியான மாற்றுவழிகள் அல்லது தீர்வுகள் முன்வைக்கப்படவில்லை. அதனிலும் மேலாக இன்னும் பலர் அதன் அடிப்படை எண்ணக்கருவை அறிந்து கொள்ளாமல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மாணவர்களுக்கு வழங்கப்படும் புள்ளிகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் தொடர்பான நம்பகம் பேணப்படவில்லை. பொதுப் பரீட்சைப் புள்ளிகளுடன் கணிசமான சதவீதம் சேர்த்துக்

கொள்ளப்படுதல் வேண்டும் என்பதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படமிடத்து கணிப்பீட்டுப் புள்ளிகளின் நம்பகமற்ற தன்மைகள் பிரதானமான எழுவினாவாக உள்ளன.

பாடங்களைத் தொகுதிகளாகப் பிரித்து மையப்பாடங்கள் கட்டாயமாகவும் ஏனைய தொகுதிகளிலிருந்து மாணவர்கள் விரும்பிய ஒவ்வொரு பாடத்தையும் தெரிவுசெய்தல் வேண்டுமென்பது நியதி. ஆயினும் இவற்றினைத் தெரிவுசெய்வதில் மாணவர்களுக்கு மயக்க நிலையுண்டு. உலகளாவிய மாற்றங்களுக்கேற்ப புதிய அறிவு மற்றும் திறன்களை அறிதல் வேண்டும் என்ற நோக்கில் அறிமுகப்படுத்தும் விடயங்கள் கவனமாகத் திட்டமிடப்படாமையால் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அநேகம்.

கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதலின் தராதரம் தொடர்பாக எழும் இன்னொரு எழுவினா பாடநூல் பற்றியதாகும். பாடநூல் பாடத்தின் குறித்த கற்பித்தல் மட்டத்தை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்படும் சாதனமாகவும் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படைச் சாதனமாகவும் அமைகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் மாணவருக்கு இலகுவில் கிடைக்கக்கூடிய வாசிப்புச் சாதனமாகவும் சோதனைக்கு ஆயத்தஞ் செய்வதற்குரிய அடிப்படை வழிகாட்டியாகவும் பாடநூல்கள் அமைந்துள்ளன. மாணவர்கள் பெரும்பாலும் பாடநூல்களில் உள்ளவற்றையே பரீட்சைகளில் மீளக்கூறும் வழக்கமும் உள்ளது. பாடநூல்களின்றி ஆசிரியர்கள் பலரால் வகுப்பறைக் கற்பித்தலை வினைதிறனுள்ள விதத்தில் முன்னெடுத்தச் செல்லமுடிவதில்லை. அல்லது ஆசிரியர்கள் முழுமையாகவே பாடநூல்களில் தங்கியிருக்கின்றனர். சில பாடநூல்கள் கற்பதற்குப் பொருத்தமானவையாகக் காணப்படவில்லை. அவை உண்மை வாழ்க்கை நிலையிலிருந்தும் வெகுதூரம் விலகியுள்ளன (NEC, 2003).

பாடநூல் தொடர்பாகக் கவனத்தில் கொள்ளவேண்டிய இன்னொரு விடயமாக, மாணவர்கள் எல்லோரும் ஒரே பாடநூலைக் கற்கும்பொழுது அறிவில் பன்முகத் தன்மைக்கு இடமில்லாமல் இருத்தலைக் குறிப்பிடலாம். ஒரே பாடநூலினை அடிப்படையாகக் கொண்டு கற்கும்பொழுதும் மாணவரின் சிந்தனையில் கட்டுருவாக்கம்

வேறுபடுதல் வேண்டும் என எடுகோளாக்கம் செய்யப்பட்டிருந்தாலும் மையப்படுத்தப்பட்ட பரீட்சை முறைகளால் ஒரேவகையான விளைவுகளை நோக்கியே மாணவர்கள் திசைமுகப்படுத்தப்படுகிறார்கள். இதன் காரணமாக பாடநூல்களுக்கு அப்பால் சென்று கற்க முடியவில்லை என்ற மனவேதனை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உண்டு. சமகாலக் கற்பித்தலில் பின்பற்றப்படும் E5 முறையினால் விரும்பிய் விளைவுகளை அடைவதில் பல ஐயங்கள் தோன்றுகின்றன.

ஆசிரியர் அறிவரைப்பு வழிகாட்டி (Teacher Instructional Manuel) பற்றியும் இங்கு எடுத்தாளுதல் பயனுள்ளதாக இருக்கும். கற்றல் - கற்பித்தலின் தராதரத்தினை உறுதி செய்யும் இன்னொரு முக்கியமான ஆவணம். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி மிக விரிவாக எல்லா விடயங்களையும் உள்ளடக்கும் விதத்தில் எழுதப்படுகின்றமை வசதிகளற்ற தூரப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு பயனுள்ளதாக இருக்கும் என்பதில் கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லை. ஆயினும் இவை ஆசிரியர்களின் சுயசெயற்பாடுகள்மீது கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றன. மாணவர்களின் தேவை, ஆற்றல், அனுபவங்கள் ஆகியவற்றுக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள அறிவுரைப்பு வழிகாட்டிகள் வழங்கும் சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் ஒருபடி மேலேசென்று சொல்வதானால் ஆசிரியரின் தேடும் பணி மற்றும் ஆக்கத்திறன் என்பனவும் அதனால் கட்டுப்படுத்தப்படுகின்றமை புத்தாக்கங்களைப் பிரயோகிப்பதில் தடைகளை ஏற்படுத்துகின்றமை ஆசிரியரின் தொழில்சார் சுயதிறன்களுக்கு சவாலாகும். கல்வியின் தராதரமேம்பாடு குறித்து மேற்கூறிய விடயங்கள் கொள்கை வகுப்பாளரின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துவருகின்றன.

கற்றல் கற்பித்தலும் மதிப்பீடும்

பொதுப் பரீட்சைகளால் ஏற்படுத்தப்பட்ட போட்டிச் சூழல் மாணவரிடத்தில் மன அழுத்தங்களை மட்டுமன்றி கல்வியில் வெறுப்பையும் தூண்டுகிறது. வெட்டுப்புள்ளிகளுக்கு மேல்

புள்ளிகள் பெற்றவர்கள் ஒரு சிலராக இருப்பதற்காக ஏனைய மாணவர்கள் தமது கல்வியைத் தியாகம் செய்ய வேண்டியுள்ளது. சித்தியெய்தத் தவறிய மாணவர்கள் பலர் ஐந்தாம் தரத்தில் பின்பற்றப்படும் தவறான கற்பித்தலால் நுழைவுத் தகுதியில்லாமலேயே இடைநிலைக் கல்வியை எதிர்கொள்கின்றனர். நகரப் பாடசாலைகளிலும் இரண்டாம் வகைப் பாடசாலைகளிலும் இப்பிரச்சினை கூடுதலாக உள்ளது.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சராசரியாக 50 சதவீத மாணவர்களே சித்தியடைவதும் கணிசமான தொகையினர் எல்லாப் பாடங்களிலும் சித்தியடையாத நிலையும் உண்டு. சித்தியடையும் மாணவர்களில் ஏறக்குறைய 20 சதவீதத்தினர் வரையிலேயே க.பொ.த உயர்தர வகுப்பிற்குத் தகுதிபெறுவதும் அவ்வகுப்பில் ஏறக்குறைய 67 சதவீதமானவர்கள் சித்தியடைகின்றமையும் தராதரத்தில் குறைபாட்டினையே சுட்டிநிற்கின்றன. பின்தங்கிய பிரதேசங்களில் நிலவும் பல்வேறு வளக்குறைபாடுகள் வினையாற்றல் குறைபாடுகளுக்குக் காரணகின்றது

தேர்ச்சியடிப்படைக் கற்பித்தலின்படி மாணவர்கள் குறித்த தேர்ச்சி மட்டங்களை அடைதல் வேண்டும். வகுப்பறைத் மட்டக் கணிப்பீட்டில் உயர் தேர்ச்சியைப் பெறும் மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் உரிய பெறுபேறுகளைப் பெறத் தவறிவிடுகின்றனர். பாடசாலைக் களநிலைக் கணிபீட்டின் தராதரமின்மையை எடுத்துக்காட்டுகின்றன. தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டுப் பரீட்சைகளலும் கணிசமான தொகையினர் 50 புள்ளிகளுக்கும் குறைவாகப் பெறுகின்றர் என்ற முடிவினை தேசிய கல்வி ஆராய்ச்சி நிலைய அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. கணிப்பீட்டில் காணப்படும் குறைபாடுகளை நீக்கும் பொருட்டு அறிவு ஆட்சிகளை கணிப்பிடும் சோதனைகள் யதார்த்த நிலைக் கணிப்பீடுகளாக (authentic assessment) மாற்றப்படுதல் வேண்டுமென தேசிய கல்வி ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளது

பாடசாலை முகாமைத்துவமும் தலைமைத்துவமும்

கல்வி முறைமையில் அறிமுகம் செய்யப்படும் புத்தாக்கங்களை விளைதிறனும் பயன்பாடுமுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதில் பாடசாலை முகாமைத்துவம் பெரும்பங்கு வகிக்கிறது. அதற்கு ஏற்றவகையில் புதிய வகிபாகங்களை அதிபர்கள் மட்டுமன்றி அலுவலர்களும் ஏற்கவேண்டியுள்ளது. எமது கல்வி முறைமையைப் பொறுத்தவரையில் முகாமைத்துவ ஆளணியினர் போதியளவில் நியமிக்கப்படவில்லை என்பதுடன் இருப்பவர்களில் தொழில்சார் அபிவிருத்திக்கான ஏற்பாடுகளும் போதியளவில் இல்லையென தேசிய கல்வி ஆணைக்குழு அண்மையில் எடுத்தக்காட்டியுள்ளது. இவர்களும் காலத்துக்குக் காலம் பெற்ற பயிற்சிகள் நன்கு திட்டமிடப்படவில்லை என்பதுடன் தற்பொழுது அவர்கள் ஆற்றவேணடுமென எதிர்பார்க்கப்படும் பணிகளுடன் இணைந்து செல்லவில்லை.

அதிபர் தரத்திலுள்ளவர்கள் மற்றும் இலங்கைக் கல்வி நிருவாக சேவையிலுள்ளவர்கள் போதியளவில் நியமிக்கப்படவில்லை. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மேற்கூறிய பதவிநிலைகளில் நிரந்தரமற்ற நிலையில் நீண்டகாலம் பணியாற்றுவோர் தொகை அதிகம். இதனால் பொதுவான மேற்பார்வைப் பணிகளும், கலைத்திட்டத்துக்கான தலைமைத்துவமும் வழங்கப்படாத நிலையில் தராதரம் வீழ்ச்சியடைந்த செல்கிறது.

தராதர மேம்பாடு என்னும் நோக்கில் இன்னும் பல எழுவினாக்கள் உள்ளன. அவைபற்றி அடுத்த கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம். நீண்டகாலம் கல்வி அபிவிருத்தி தொடர்பாகக் கவனிக்கப்படாத பிரதேசங்கள் உள்ளன. மீட்சிக்கான துரித நடவடிக்கைகள் இப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படாவிட்டால் இப்பிரதேநங்களின் தராதர மேம்பாடு கனவாகவே முடியும்.

ஆலோசனை வழங்கல்

கலாநிதி அம்பலம் புஸ்பநாதன்

ஆலோசனை வழங்கல் (Counselling) என்பது ஒருவருடன், இன்னொருவர் தனது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதன் மூலம் மற்றையவர்களிடம் இருந்து பொதுவான கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதாகும். பொதுவாகக் கூறின் ஆலோசனை வழங்கல் என்றால் என்ன? என்பதனை நாம் முதலில் பார்த்தல் வேண்டும். இதற்குரிய சிறந்த வரைவிலக்கணமானது பின்வருமாறு காணப்படுகிறது. ஆலோசனை என்பது எண்ணங்கள், கருத்துக்கள், உணர்வுகள் இருவருக்கிடையில் பரிமாற்றம் செய்யப்படுவதனைக் குறிக்கும். இங்கு ஆலோசகரும் (Counsellor), ஆலோசனை பெறுவோரும் (Counselee) காணப்படுவார்கள். எனவே தான் கருத்துக்கள், உணர்வுகள் பரிமாற்றப்படுவதனால் தொடர்பாடலாகவும் இது இருக்கின்றது.

ஆலோசனை வழங்கலானது மனித வளங்கள் அனைவருக்கும் தேவையான ஒன்றாகக் காணப்படுகின்றது. பொதுவாக நிறுவனங்களிலும், உயர் கல்விக் கூடங்களிலும், வீடுகளிலும் மனித வளங்களானது பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி இருக்கின்றது. இப்பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு ஆலோசனை வழங்கலானது அத்தியாவசிய மானதாகக் காணப்படுகின்றது.

நிறுவனங்களில் ஒவ்வொருவரும் இன்னொருவருக்கு ஆலோசனை வழங்கக் கூடியவராகக் காணப்படுகிறார்கள். அதாவது மாணவர்கள் தமது சக மாணவர்களுக்கும், ஊழியர்கள் தமது சக ஊழியர்களுக்கும் கூட ஆலோசனை வழங்கலாம். ஆலோசனை வழங்கலின் பொழுது இரகசியங்களானவை பாதுகாக்கப்படல் வேண்டும்.

நிறுவனங்களைப் பொறுத்தவரையில் ஊழியர்களின் பிரச்சனைகள் நிறுவனத்தின் உற்பத்தித்திறனையும், ஊழியரின் செயற்திறனையும் பாதிக்கக் கூடியனவாக இருக்கின்றன.

இலங்கையை பொறுத்தவரையில் பெரும்பாலானோர் வெவ்வேறுபட்ட உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றார்கள். இத்தகையோர் ஒரு ஆலோசகரைத் தேடி வரமாட்டார்கள். எனவே தான் இவர்கள் எப்பொழுதும் பாதிப்புக்கு உட்பட்டவர்களாகவே காணப்படுகிறார்கள்.

ஆலோசனை யாருக்கு தேவைப்படுகின்றது

பொதுவாகக் கூறின் ஆலோசனையானது யாருக்குத் தேவைப்படுகிறது? இங்கு வேறுபட்ட தரப்பினர்களினை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

- நிறுவனங்களில் வேலைப்பழுவினால் விரக்தியடைந்தோர்
- பெற்றோர்களினால் கைவிடப்பட்ட குழந்தைகள்
- ஏனையோர் தன்னை குறைவாக நினைக்கின்றார்கள் என்ற எண்ணம் உள்ளவர்கள்
- இடப்பெயர்வில் உளரீதியாக பாதிக்கப்பட்டோர்
- மற்றவர்கள் முன் தமது கருத்துக்களினை கூற பின்வாங்குவோர்
- ஏனையோர் ஏவு சொல் கேட்டு பிழையான வழிக்கு செல்வோர்
- போதைவஸ்துக்கு அடிமையானோர்
- மது, சிகரட் போன்ற பழக்கங்களுக்கு அடிமையானோர்
- குறிப்பிட்ட பாடம் தங்களினால் படிக்க முடியவில்லை என விரக்தியுற்றோர்
- பெற்றோர்களினால் பிச்சை எடுக்கும் தொழிலுக்கு தள்ளப்படும் குழந்தைகள்
- பெற்றோரின் நாளாந்த சச்சரவினால் பாதிக்கப்படும் குழந்தைகள்
- பல்கலைக்கழக புகுமுக மாணவர்களும் ஏனைய துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் மாணவர்களும்

ஆலோசனை வழங்கல் மூலம் நாம் ஒருவருக்கு என்ன செய்ய முடியும்?

ஆலோசனை வழங்கலின் பொதுவான நோக்கமானது, மனித வளங்களின் உள உறுதியினை விருத்தி செய்வதாகும். இதன் மூலம் மனித வளங்களின் சுயநம்பிக்கை, புரிந்துணர்வு, சுயகட்டுப்பாடு, ஒரு செயலைத் திறனாகச் செய்யும் ஆற்றல் என்பவற்றினை வளர்க்க முடியும்.

ஆலோசனை வழங்கல் தொழிற்பாடுகள்

ஆலோசனை வழங்கல் தொழிற்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம் ஆலோசனை வழங்கலின் நோக்கத்தினை அடைய முடியும். இதன் அடிப்படையில் ஆறு தொழிற்பாடுகளை நாம் அடையாளம் காணமுடியும்.

- புத்திமதி கூறுதல் (Advice)
- மீள் நம்பிக்கை ஊட்டல் (Reassurance)
- தொடர்பாடல் (Communication)
- உணர்ச்சி வசப்பட்ட பதற்றத்தினை தவிர்த்தல் (Avoid Emotional Tension)
- சிந்தனைகளினை ஆராய்தல் (Clarified Thinking)
- மீள் திசைமுகப்படுத்தல் (Re Orientation)

➢ புத்திமதி கூறுதல்

ஆலோசனை வழங்கலானது புத்திமதி கூறுதலின் ஆரம்பக் கட்டமென நம்மில் பலர் கருதுகின்றோம். ஆனால் ஆலோசனை வழங்கலின் ஒரு தொழிற்பாடாகவே இப் புத்திமதி கூறுதல் காணப்படுகின்றது. இங்கு ஆலோசகர் ஆலோசனை பெறுபவரின் பிரச்சினைகளுக்கும் அவரால் சொல்லப்படும் காரணங்களுக்கும் தீர்ப்பு வழங்குபவராகக் காணப்படுவார். இதன் பின்னர் சிக்கலான பிரச்சினைகளைக் கையாளுவது ஆலோசகருக்கு அசாதாரணமாக காணப்படும். இத்தொழிற்பாட்டில் ஆலோசனை பெறுபவருக்கு தான் ஆலோசனை வழங்குபவரில் தங்கி இருக்கின்றார் என்ற எண்ணத்தினை உருவாக்கும். எனவே தான் புத்திமதி கூறுதலானது

பொதுவாக வைத்தியரினால் நோயாளிக்கும், ஆசிரியர்களினால் மாணவர்களுக்கும் மேற்கொள்ளப்படும்.

➢ மீள் நம்பிக்கை ஊட்டல்

ஆலோசனை வழங்கலின் மூலம் தனிநபர் ஒருவருக்கு மீள் நம்பிக்கையினை ஏற்படுத்த முடியும். தனிநபர் ஒருவர் சரியான அல்லது பொருத்தமான வேலையினை முன்னெடுத்துச் செல்லும் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு அல்லது நம்பிக்கைகளுக்கு உற்சாகம் வழங்குதல் வேண்டும். மீள்நம்பிக்கை ஊட்டலானது ஆலோசகரினால் வழங்கப்படும் குறிப்புரையாக (Remarks) காணப்படுகின்றது. **உதாரணமாக:**

“நீ நல்ல முன்னேற்றத்தினை அடைந்திருக்கின்றாய்”

“ கவலைப்படாதே , நல்லதே நடக்கும்”

போன்ற சில குறிப்புரைகள் ஆலோசகரினால் எடுத்துக் கூறப்படல் வேண்டும்.

மீள் நம்பிக்கை ஊட்டலில் ஆலோசனை பெறுபவர் ஒருபொழுதும் இதனை ஏற்கமாட்டார். ஏனெனில் இங்கு ஆலோசனை பெறுபவரால் வெளிக் கொண்டுவரப்படும் பிரச்சினைகள் யாவும் சரியானதாக இருக்குமென ஆலோசகரினால் தெளிவாக அறிய முடியாது. எனவே தான் மீள் நம்பிக்கை ஊட்டல் மூலம் ஆலோசனை வழங்கும் பொழுது ஆலோசனை பெறுபவருக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தக் கூடியதாகவும், ஆலோசகர் மீது நம்பிக்கை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

➢ தொடர்பாடல்

ஆலோசனை வழங்கலானது மேல்நோக்கிய (Upward), கீழ்நோக்கிய (Downward) தொடர்பாடலை விருத்தி செய்வதாக இருக்கின்றது. மேல்நோக்கிய தொடர்பாடலாக மாணவர்கள் தமது எண்ணங்கள், கருத்துக்கள், உணர்வுகள் போன்றவற்றினை ஆசிரியருக்கு கூறுவதனையோ, அல்லது ஊழியர்கள்

முகாமையாளருக்கு கூறுவதனையோ குறிப்பிடலாம். ஆனால் சில தரப்பினர் கீழ் நிலையில் உள்ளவர்களை சரியாக புரிந்து கொள்ள முடியாமல் உள்ளனர். இதன் காரணமாக ஆலோசனை வழங்கலானது மேல் நோக்கிய தொடர்பாடலைப் பெரிதும் வரவேற்கின்றது. இதன் மூலம் ஒரு ஆலோசகர் ஆலோசனை பெறுபவரின் பிரச்சினைகளை தெளிவாகப் புரிந்து கொண்டு அவர்களுக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்க முடியும். மேலும் ஒரு ஆலோசகர் ஆலோசனை பெறுபவருக்கு ஏற்படும் பிரச்சினைகள், வசதியீனங்கள் போன்றவற்றினை முன்கூட்டி கலந்துரையாடி அதுபற்றிய பூரண அறிவினை ஆலோசனை பெறுபவருக்கு வழங்குதல் கீழ்நோக்கிய தொடர்பாடல் எனப்படும்.

➢ **உணர்ச்சி வசப்பட்ட பதற்றத்தினை தவிர்த்தல்**

இது மிக முக்கியமான தொழிற்பாடாக ஆலோசனை வழங்கலில் காணப்படுகின்றது. இதனடிப்படையில் ஆலோசனை தேவைப்படுவோர் தமக்கு ஏற்பட்ட விரக்தி, குழப்பநிலைகள் போன்றவற்றினை தனக்கு விரும்பிய ஒருவருக்கு குறிப்பிட முற்படுவார். ஆலோசனை வழங்குதலில் இவ் உணர்ச்சி வசப்பட்ட பதற்றத்தினை தவிர்த்தலானது ஒரு பிரச்சினைக்குரிய தீர்வாக அமையமாட்டாது. மாறாக இது உளரீதியாக ஏற்படும் தடைகளை (Mental Blocks) அகற்றுகின்ற ஒன்றாகக காணப்படுகின்றது.

➢ **சிந்தனைகளினை வகுத்தாராய்தல்**

ஆலோசனை பற்றிய ஐந்தாவது தொழிற்பாட்டினை ஐவின் (Irwin) முன்வைத்தார். இவர் உணர்ச்சி வசப்பட்ட கருத்தானது கூடுதலாக சந்தர்ப்பங்களுக்குரிய உண்மைகளைக் கொண்டுவர முடியவில்லை என கூறினார். எனவே தான் இவர் சம்பவங்களைச் சிறியதாகச் சுருக்கி பரந்தளவிலான முடிவினை எடுத்தார். உணர்வுபூர்வமான தடைகளுக்குரிய நேரடி சிந்தனைகளைத் தவிர்த்து, பகுத்தறிந்து சிந்திக்கத் தொடங்கினார். எனவே தான் திறன்மிக்க ஆலோசனை

வழங்குவோன் பெறுபவன் என்ன நினைக்கின்றான் என வகுத்தராய வேண்டும்.

➢ மீள் திசைமுகப்படுத்தல்

ஆலோசனை வழங்கலின் அடுத்த தொழிற்பாடாக மீள் திசைமுகப்படுத்தலானது காணப்படுகின்றது.. அடிப்படை இலக்கினையும், உள்ளகப் பெறுமதியினையும் மாற்றுவதன் மூலம் மனிதர்களின் அசாதாரண மனமாற்றங்களை (Psychic) ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக மக்கள் தங்களது சொந்த வரையறைகளை ஏற்றுக்கொள்ளவும் அங்கீகரிக்கவும் உதவமுடியும். மீள் திசைமுகப்படுத்தல் மூலம் நாம் மதுபான பிரியர்களை (Alcoholics) சாதாரண மனிதனாக மாற்றமுடியும், அல்லது பாரிய மன அழுத்தங்களுக்கு உட்பட்டவரை மாற்றத்திற்கு உண்டாக்க முடியும். நிறுவனங்களைப் பொறுத்தவரை முகாமையாளர் தமது ஊழியர்களை மீள் திசைமுகப்படுத்துகின்ற கடப்பாட்டிற்கு உட்பட்டவராக இருக்கின்றார்.

ஆலோசனை வழங்கல் முறைகள்

நிறுவனங்களில் ஆலோசனை வழங்கல் முறையானது மூன்று வகையாகக் காணப்படுகின்றது.

01. நெறிப்படுத்தும் ஆலோசனை வழங்கல் (Directive Counselling)
02. நெறிப்படுத்தா ஆலோசனை வழங்கல் (Non - Directive Counselling)
03. பங்கு பற்றும் ஆலோசனை வழங்கல் (Participative Counselling)

01. நெறிப்படுத்தும் ஆலோசனை வழங்கல

இது ஆலோசகர் மையமுறை (Counsellor – Centered) எனவும் அழைக்கப்படும். அல்லது ஆலோசனை பெறுபவரின் பிரச்சினைகளை ஆலோசகர் கேட்டதன் பின்னர் அவரது சில

அறிவுரைகளை வழங்குதல் வேண்டும். நெறிப்படுத்தும் ஆலோசனை வழங்கலானது ஆலோசனை வழங்கல் தொழிற்பாடுகளில் பெரும்பாலானவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இங்கு புத்திமதி கூறுதல், மீள் நம்பிக்கை ஊட்டல், தொடர்பாடல், உணர்ச்சி வசப்பட்ட பதற்றத்தினைத் தவிர்த்தல் போன்றன பெரியளவில் பின்பற்றப்படுகின்றன. இங்கு ஆலோசனை பெறுபவர் இரண்டாம் இடத்தையே வகிக்கின்றார். முடிவுகள் யாவும் ஆலோசகருடையதாகவே காணப்படும்.

02. நெறிப்படுத்தா ஆலோசனை வழங்கல்

நெறிப்படுத்தா ஆலோசனை வழங்கலானது நெறிப்படுத்தும் ஆலோசனை வழங்கலுக்கு முற்றிலும் எதிர்மாறானதாகக் காணப்படும். இங்கு ஆலோசனை பெறுபவர் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதுடன், சிக்கல் நிறைந்த பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அவற்றினை புரியும்படி செய்வதுடன் அவற்றுக்குரிய தீர்வுகளை அவர்களே அணுகுதல் வேண்டும். இங்கு ஆலோசகரானவர் ஒரு நீதிமானாகக் காணப்படுவார். எனவே தான் இது ஆலோசனை பெறுபவர் மையமுறை என அழைக்கப்படுகின்றது. இங்கு மாணவர்களாக இருந்தால் என்ன ஊழியர்களாக இருந்தால் என்ன அவர்களின் கருத்துக்களுக்கு ஆலோசகர் அபிப்பிராயம் வழங்காது அவர்களையே சிந்தித்து செயலாற்றவிட வேண்டும்.

03. பங்கு பற்றும் ஆலோசனை வழங்கல்

இவ் ஆலோசனை வழங்கலானது நெறிப்படுத்தும், நெறிப்படுத்தா ஆலோசனை வழங்கல்களுக்கு இடைப்பட்டதாகவே காணப்படும். இங்கு ஆலோசகரும், ஆலோசனை பெறுபவரும் பங்கு பற்றுவதனால் இருவரது அறிவு, திறன், மனப்பாங்கு, ஆகியன பரிமாறப்பட்டு இறுதியில் தீர்வு எடுக்கப்படும். இருந்தாலும் இம்முறையில் இருபக்கம் சார்ந்தனவாகவே காணப்படுகின்றது. இங்கு நான்கு வகையான ஆலோசனை வழங்கல்

தொழிற்பாடுகளான மீள் நம்பிக்கை ஊட்டல், தொடர்பாடல், உணர்ச்சிவசப்பட்ட பதற்றத்தினை தவிர்த்தல், சிந்தனைகளை வகுத்தாராய்தல் போன்றன நிறைவேற்றப்படுகின்றன. ஏனைய வழிமுறைகளை விட இங்கு இருவரது பங்களிப்பும் முக்கியத்துவம் வாய்ந்தனவாகவே காணப்படுகின்றது.

இங்கு நாம் நிறுவனத்தில் ஆலோசனை வழங்கலின் முக்கியத்துவத்தைப் பற்றி பார்த்திருக்கின்றோம். பொதுவாக நிறுவனங்களுக்கு இவ் ஆலோசனை வழங்கலானது மிகவும் தேவைப்படுவதாக வேண்டியிருக்கின்றது. சில நேரங்களில் நிறுவனங்களைப் பொறுத்தவரை ஊழியர்கள் தமது சொந்தப்பிரச்சினை, உடல்நலக் குறைவு, போதைவஸ்து பாவித்தல், நிதிப்பிரச்சினைகள் போன்றவற்றில் சிக்கித் தவிக்க வேண்டி இருக்கும். இந்நிலைகளில் அவர்கள் தமது வேலைகளில் கவனம் செலுத்தாமல் இருப்பார்கள். இதனால் நிறுவனத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்படலாம். அந்த நேரங்களில் முகாமையாளர்கள் ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்குவதுடன் அவர்களை ஊக்கப்படுத்தவும் வேண்டும். இதன் மூலம் நிறுவனம் தமது தொழிற்பாட்டை தடங்கலின்றி செயற்படுத்த முடியும்.

மாணவர்களைப் பொறுத்த வரையில் ஆலோசனை வழங்கல் மூலம் சுயமாக சிந்திக்க விட்டு அவர்களே தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணல் சிறந்த வழியாகக் காணப்படுகின்றது. எனவே தான் சிறந்த ஆலோசனை வழங்கல் மூலம் நாம் நிறுவனங்களில் காணப்படும் முரண்பாடுகளை நீக்கி நிறுவனத்தை திறம்பட செயற்படுத்த முடியும்.

கலாநிதி அம்பலம் புஸ்பநாதன்
தலைவர், பொருளியல் முகாமைத்துவ துறை
வியாபார கற்கைகள் பீடம்
வவுனியா வளாகம்

சுற்றளவு (Perimeter)

1) செவ்வகம்



$P=2(L+b)$

2) சதுரம்



$P=4a$

3) முக்கோணி



$P=a+b+c$

4) வட்டம்



$P=2\pi r$

பரப்பளவு (Area)

1) செவ்வகம்



A=நீளம்Xஅகலம்

$= l \times b$

2) சதுரம்



$A=a^2$

3) முக்கோணி



$A=\frac{1}{2}$ அடிXசெங்குத்துயரம்

$=\frac{1}{2} bh$

4) வட்டம்

$A=\pi r^2$



$A=l+h$

எண்கோலங்கள்

$n = 1, 2, 3 \ldots\ldots\ldots\ldots$

$Tn = 2n$ - இரட்டை எண்கள்

$Tn = 2n-1$ - ஒற்றை எண்கள்

$Tn = n2$ - சதுர எண்கள்

$Tn = \frac{n(n+1)}{2}$ - முக்கோணி எண்கள்

சுட்டி விதிகள்

1) $a^m \times a^n = a^{m+n}$
2) $a^m \div a^n = a^{m-n}$
3) $(ab)^m = a^m b^m$
4) $(am)^n = a^{nm}$
5) $a^{-n} = \frac{1}{an}$
6) $a^0 = 1$

மடக்கை

1) $ax = y \iff \log_a y = x \quad a_1 n > 0 \quad a \neq 1$
2) $\log_a mn = \log_a m + \log_a n$
3) $\log_a \frac{m}{n} = \log_a m - \log_a n$
4) $\log_a mp = p \log_a m \qquad P \in R, M n > o, a \neq 1$

விகிதம், விகிதசமன்

$a : b = c : d$ எனின்

1) $\frac{a+b}{b} = \frac{c+d}{a} \qquad ab = c\, a = \frac{ma+nc}{mb+nd}$

2) $\frac{a-b}{b} = \frac{c-d}{a}$

3) $\frac{a+b}{a-b} = \frac{c+d}{c-a}$

ஈருறுப்பு விரிவு

$$(a+b)^2 = a^2+2ab+b^2$$

$$(a-b)^2 = a^2-2ab+b^2$$

$$(a+b)^3 = a^3+3a^2b+3ab^2-b^3$$

$$(a - b)3 = a3-3a^2b+3ab^2-b^3$$

$$(a+b+c)^2 = a^2+b^2+c^2+2ab+2bc+2ac$$

இருபடிச்சமன்பாடு

$ax^2 + bn+c = O$ எனின்

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a}$$ ஆகும்

திரிகோண கணிதம்

$$\sin\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{செம்பக்கம்}} \qquad \text{Cos}\theta = \frac{\text{அயற்பக்கம்}}{\text{செம்பக்கம்}}$$

$$\text{Tan}\theta = \frac{\text{எதிர்ப்பக்கம்}}{\text{அயற்பக்கம்}}$$



$$\text{Sin}(90^0-\theta) = \text{Cos}\theta$$

$$\text{Cos}(900 - \theta) = \text{Sin}\theta$$

கோணம்	Sin	Cos	Tan
0^0	0	1	0
30^0	$1/2$	$\frac{\sqrt{3}}{2}$	$\frac{1}{\sqrt{3}}$
45^0	$\frac{1}{\sqrt{2}}$	$\frac{1}{\sqrt{2}}$	1
60^0	$\frac{\sqrt{3}}{2}$	$1/2$	$\sqrt{3}$
90^0	1	0	முடிவிலி

$$\mathrm{Sin}^2\theta + \mathrm{Cos}^2\theta = 1$$
$$\mathrm{Sin}2\theta = 2\sin\theta\cos\theta$$

$$\mathrm{Tan}\theta = \frac{\mathrm{Sin}\theta}{\mathrm{Cos}\theta}$$

எளிய வட்டி

$$1 = \frac{PRT}{100}$$

மாத அலகுகள்

$$= \frac{n \times (n+1}{2}$$

நிகழ்தகவு

$$P(A) = \frac{n(A)}{n(S)}$$

உண்மை இடை = உத்தேச இடை + விலக்கல் இடை

$y = mz + c$ என்ற நேர்கோட்டின்
படித்திறன் = m
வெட்டுத்துண்டு = c

முலாம் காலணை

$$Q_1 = \frac{(n+1)}{4} \text{ வது ஈட்டு}$$

இரண்டாம் காலணை

$$Q_2(\text{இடை}) = \frac{(n+1)}{2} \text{ வது ஈட்டு}$$

மூன்றாம் காலணை

$$Q_3 = \frac{3}{4}(n+1) \text{ வது ஈட்டு}$$

காலணை இடைவீச்சு

$$= Q_3 - Q_1$$

பொது அறிவு

1) 2011ம் ஆண்டு சர்வதேச ரீதியாக எவ்வாண்டாக பிரகனப்படுத் தப்பட்டுள்ளது?

   இரசாயனவியல் ஆண்டு

2) புதன் கிரக வளையத்தை சுற்றும் 1வது விண்கலம் எது?

   மெஞ்சர்

3) உலகில் இதுவரை வாழ்ந்த தவளைகளில் மிகப்பெரிய தவளையின் எச்சத்தை எத்தீவில் கண்டுபிடித்துள்ளனர்?

   மடகஸ்கார் தீவு

4) 2014ஆம் ஆண்டிற்கான குளிர்கால ஒலிம்பிக் போட்டி எங்கு நடைபெறவுள்ளது.?

   ரஷ்யா

5) மிக வேகமாக சூரியனைச் சுற்றும் கோள் எது?

   புதன்

6) கட்டாரில் நடைபெற்ற 15வது ஆசியக் கோப்பை கால்ப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?

   ஜப்பான்

7) 2011ம் ஆண்டில் நடைபெற்ற 83வது ஒஸ்கார் திரைப்படவிழாவில் சிறந்தபடமாக தெரிவு செய்யப்பட்ட படம் எது?

   Green Speech

8) ஆசியாவின் பசுமைப்புரட்சிக்கு வித்திட்டவர் யார்?

   சுவாமி நாதன்

9) உலகின் மிக மோசமான அனுநிலைய விபத்துக்கள் எப்போது எங்கு நடைபெற்றது?

   1986 => செர்னோபில் (ரஷ்யா)

   2011 => பியூகுசிமா (ஜப்பான்)

10. 2011 உலகக்கிண்ண கிரிக்கட் கோப்பையை வென்ற நாடு?

   இந்தியா

11. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணை வேந்தர் யார்?

திருமதி வசந்தி அசரட்ணம்

12. 2011ம் ஆண்டுக்கான புலிற்சர் விருது யாருக்கு எந்நூலுக்கு வழங்கப்பட்டது?

நூல் :- "சகல நேரங்களினதும் சக்கரவர்த்தி புற்றுநோயின் சரிதை"

எழுதியவர்:- சித்தார்த் முகர்ஜி

13. இலங்கையில் செய்மதி தொடர்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

1962

14. உலகின் மிகக் குறைந்த புவியீர்ப்பு சக்தி உள்ள இடம் எது?

இலங்கையின் தென்மாகாணம் அதன் கடலோரப்பகுதியும்.

15. உலகின் அதிகூடிய பவியீர்ப்பு சக்தி உள்ள இடம் எது?

பிரிட்டன், கிறீன்லாந்து தீவுகளுக்கிடையிலான கடல்ப்பகுதி

16. முதல் தமிழ்ப் பத்திரிக்கையான உதயதாரகை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

இலங்கை

17. 2011ல் பொதுநலவாய செயலகத்தின் நீதிபதிகள் மாநாடு எங்கு நடைபெற்றது?

இலங்கை

18. இலங்கையின் முதல் பெண் பிரதம நிதியரசர் யார்?

கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க

19. 2011ன் புத்த ஜெயந்தி வெசாக் எத்தனையாவது வருட வெசாக்காகும்

2600

20. அண்மையில் சுட்டுக்கொள்ளப்பட்ட அல்கொய்டா இயக்கத் தலைவர் யார்?

ஒசாமா பின்லேடன்

21. கம்பளி உற்பத்தி முதலில் ஆரம்பிக்கப்பட்ட நாடு எது?

ஈரான்

22. பிரான்ஸ் நாட்டில் வழங்கப்படும் உயர் விருது எது?
செவாலியர் விருது

23. 17வது SAARC மாநாடு எங்கு நடைபெற்றது? கருப்பொருள் யாது?
மாலைதீவு (2011)
கருப்பொருள் :- பிணைப்புக்களை கட்டியெழுப்பல்

24. 6வது பெண்களுக்கான உலகக்கோப்பை கால்ப்பந்தாட்டப் போட்டி எங்கு நடைபெற்றது?
பிராங்போட் (ஜேர்மனி)

25. இப் போட்டியில் கோப்பையை வென்ற அணி எது?
ஜப்பான்

26. 47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஆசியா - ஆபிரிக்கா சட்டமன்றத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?
ரவூப்ஹக்கிம் (இலங்கை)

27. தாய்லாந்தின் முதற்பெண் பிரதமர் யார்?
இங்லக் சினாவத்ரா

28. 2018ம் ஆண்டிற்கான குளிர்கால ஒலிம்பிக் போட்டி எங்கு நடைபெறவுள்ளது.
தென்கொரியா

29. சகாரா பாலைவனம் எங்குள்ளது?
வட ஆபிரிக்கா

30. வாழ்நாளில் குரைக்காத நாய் எது?
டிங்கோ

31. அணுக்கொள்கையை முதலில் வெளியிட்டவர் யார்?
தாற்றன்

32. பெண்களுக்கு வாக்குரிமையளித்த முதல் நாடு?
நியூசிலாந்து

33. உலகின் 193வது நாடாக அண்மையில் எந்நாடு உருவாகியது?
தென்சூடான்(09.07.2011)

34. இலங்கையின் புதிய மிருகக்காட்சிசாலை எங்கு அமைந்துள்ளது?
வாகொல்ல

35. 2011ல் நடைபெற்ற 13வது உலகக்கிண்ண வலைப்பந்தாட்ட போட்டியில் எங்கு நடைபெற்றது? எந்நாடு சாம்பியனானது?

நடைபெற்ற இடம் :-ச ிங்கப்பூர்

வென்ற நாடு :-அவுஸ ் திரேலியா

36. உலக சதுரங்கப்போட்டி 2012ஆம் ஆண்டு எங்கு நடைபெறவுள்ளது?

(சென்னை (இந்தியா)

37. 2011ல் தனது இறுதிப் பயணத்தை மேற்கொண்ட அமெரிக்காவின் கடைசி விண்வெளி ஓடம் எது?

அட்லாண்டிஸ்

38. இலங்கையில் மிருகங்களின் சரணாலயம் எங்குள்ளது?

யால

39. இருண்ட கண்டம் என அழைக்கப்படும் கண்டம் எது?

ஆபிரிக்கா

40. ஏழு குன்றுகளின் நகரம் எது?

ரோம்

41. மாயமான நிலப்பகுதி எந்தக்கண்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?

அட்லாண்டிஸ்

42. உலகின் மிக நீளமான சுரங்கப்பாதை எங்குள்ளது?

ஜப்பான்

43. உலகின் உயரமான பாலம் எங்குள்ளது?

மலேசியா

44. இலங்கையின் முதற் பிரதம மந்திரி யார்?

ஞ.ஞ. சேனாநாயக்க

45. இலங்கையின் முதற் பெண் சட்டமா அதிபர் யார்?

ஜெனரல் சாந்தி ஏவாவன சுந்தரவே

46. அன்மையில் காலமான Nobal சமாதான பரிசை வென்ற முதலாவது ஆபிரிக்கா பெண்யார்?

வங்கேரிமாதாய்

47. எவரெஸ்ட் சிகரத்திற்கு பெயரிட்டவர் யார்?

ஜோர்ஜ் எவரெஸ்ட்

48. 2011ல் 10வது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி எங்கு நடைபெற்றது?

இலங்கை, இந்தியா பங்களாதேஷ்

49. அண்மையில் காலமான Apple நிறுவன ஸ்தாபகர் யார்?

ஸ்டிவ் ஜோப்ஸ்

50. இலங்கையின் எவ் கடற்படுக்கையில் இயற்கை எரிவாயு வயல்கள் கண்டுபிடிக்கப்பட்டது?

மன்னார்

51. உலகின் முதலாவது இருகால் மாற்று சிகிச்சை எங்கு வெற்றிகரமாக நடைபெற்றது?

ஸ்பெயின்

52. உலகின் முதல் பெண் தாதி யார்?

புளோரன்ஸ் நைட்டிங்கேல்

53. 2011ம் ஆண்டுக்கான புக்கர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?

ஜீலியன் பாகஸ் (பிரிட்டன்)

54. அண்மையில் கொல்லப்பட்ட லிபியாவின் ஜனாதிபதி யார்?

முகமது கடாபி

55. 2011ன் கொமன் வெல்த் மாநாடு எங்கு நடைபெற்றது? இதன் நோக்கம் யாது?

அவுஸ்திரேலியா

நோக்கம் :- இளம்பிள்ளை வாதத்தை முற்றாக ஒழித்தல்

56. 2012இல் கொமன் வெல்த் மாநாடு எங்கு நடைபெறவுள்ளது?

இலங்கை

57. அண்மையில் ருநேுளுஊழு உடன் இணைக்கப்பட்ட நாடு எது?

பாலஸ்தீனம்

58. உலகில் எரிமலை இல்லாத கண்டம் எது?

அவுஸ்திரேலியா

59. சதுரங்க விளையாட்டின் தாயகம் எது?

இந்தியா

60. உலகின் மிகப்பெரிய அரண்மனை எங்குள்ளது?
வத்திக்கான்

61. இலங்கையில் சுனாமி எச்சரிக்கை நிலையம் எங்குள்ளது?
கிக்கடுவ

62. ஐரோப்ப ஒன்றியத்தில் அங்கம் வககிக்கும் நாடுகள் எத்தனை?
27

63. அணுக்கதிர் வீச்சை அளக்கும் அலகு யாது?
சிவோட்ஸ்

64. சர்வதேச நாணய நிதியத்தின் புதிய தவைராக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் யார்?
கிறிஸ்டினாவெகார்டோ (பிரான்ஸ்)

65. இந்தியா தமிழ்நாடு சட்ட சபை தேர்தலில் வெற்றி பெற்றவர் யார்?
செல்வி. ஜெயலலிதா ஜெயராம்
(அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம்)

66. ஐ.நா.சபை செயலாளர் நாயமாக மீண்டும் 2011 இல் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
பான்கிமூன்

67. மேற்கு வங்கத்தின் புதிய பெயர் எது?
பஸ்சிம் பங்கர்

68. இந்தியாவில் ஊழலுக்கு எதிராக உண்ணாவிரதமிருந்தவர் யார்?
அன்னா ஹசாரே

69. 2012ம் ஆண்டிற்கான ICC T-20 கிரிக்கட் போட்டி எங்கு நடைபெறவுள்ளது?
இலங்கை

70. சர்வதேச AIDS தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
December 1

71. 18வது SAARC மாநாடு எங்கு நடைபெறவுள்ளது?
காத்மண்டு (நேபாளம்)

72. 2015ஆம் ஆண்டிற்கான உலகக்கிண்ண கிரிக்கட் போட்டி எங்கு நடைபெறவுள்ளது?

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து

73. சத்யசாயி பாபா எப்போது சமாதியானார்? இவர் சென்ற ஒரேயொரு வெளிநாடு எது?

24 April 2011

நாடு :- உகாண்டா

74. அண்மையில் வத்திக்கான் அரசால் புனித அருளாளர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட பாப்ரசர் யார்?

2ம் ஜோன் போல் (2005இல் இறந்தார்)

75. இந்தியாவின் தேசியவிருது பெற்ற ஈழத்து கவிஞப் யார்?

வ.ஐ.ச.ஜெயபாலன்

76. நானோ தொழில் நுட்பத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் யார்?

(ரிச்சாட் பேர்மன் (1959)

77. காபனின் புதிய பிறதிருப்பம் எது?

Fullerene (C-60)

78. ஆயுள் வேத மருத்துவத்தின் தந்தை யார்?

சாரகர் (இந்தியா)

79. உலகில் கடற்கரை இல்லாத நாடுகள் எத்தனை?

26

80. ஆசியாவில் உள்ள ஒரேயொரு கிறிஸ்தவ நாடு எது?

பிலிப்பைன்ஸ்

81. Big Bank Theory ஐ வெளியிட்டவர் யார்?

எட்வின் ஹபிள்

82. வீக்கில்ஸ் இணையத்தளத்தை நிறுவியவர் யார்?

ஜீலியன் அசாஞ்சே

83. பன்றிக்காய்ச்சலை ஏற்படுத்தும் வைரஸ் எது?

இம்புளுவன்ஸ் A1 H1

84. இலங்கையின் தற்போதைய பிரதமர் யார்?

D.M.ஜயரட்ண

85. புளுட்டோ கோள் கோள்களின் கூட்டத்தில் அடங்காது என எப்போது பிரகடனப்படுத்தப்பட்டது.

2006.08.20

86. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு எது?

இந்தியா

87. மனித உடலில் குருதி பாயாத பகுதி எது?

கண்ணின் கருவிழி

88. SAARC அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

நேபாளம்

89. பென்சிலினை கண்டுபடித்தவர் யார்?

அலெக்ஸாண்டர் பிளேமிங்

90. இலங்கைக்கு மின்சாரத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர் யார்?

டி.ஜே.விமலசுரேந்திரம்

91. உலகிலுள்ள மிகப்பெரிய வித்து எது?

இரட்டைத் தேய்காய்

92. உலகிலுள்ள மிகச்சிறய வித்து எது?

ஓர்கிட் தாவர வித்து

93. மனிதனினால் முதலாவதாக கண்டறியப்பட்ட உலோகம் எது?

தங்கம்

94. AIDS நோயைக் கண்டறிந்தவர்?

லொக் மொனிட்டர்

95. விமானத்தில் செல்வோருக்கு வானவில் தெரியும் வடிவம்?

வட்டம்

96. இயல்பியலின் தந்தை யார்?

சேர்.ஐ.சாக்.நியூட்டன்

97. ATM இயந்திரத்தை கண்டுபடித்தவர் யார்?

ஜான்ஷெப்பர்டுபாரன்

98. உலகின் மிகப்பெரிய தனியிலை கொண்ட தாவரம் எது?

இராட்சத நீர் அல்லி

99. உலகின் மிக உயர்ந்த கட்டடம் எது?

புர்ஜ் ஹலிபா

100. அச்சுப் பிழையுள்ள நாணயங்களுக்கு வழங்கப்படும் பெயர்?

Fido

2011ம் ஆண்டிற்கான நோபல் பரிசு

1) மருத்துவம்

* புரூஸ் பட்லர் (அமெரிக்கா)
* ஜீல் ஹொப்மன் (பிரான்ஸ்)
* ரல் ஃபஸ்டெய்ன் (கனடா)

:- நோய் எதிர்ப்புசக்தி எவ்வாறு உந்தப்படுகிறது என்பதற்கான ஆராய்ச்சிக்கு வழங்கப்பட்டது.

2) இயல்பியல்

* சால்பெல் முட்டர் (அமெரிக்கா)
* ப்ரியன்ஷிமிட் (அமெரிக்கா)
* ஆடம்ரீஸ் (அமெரிக்கா)

:- பிரபஞ்சம் விரிவடைந்து வருவதைக் கண்டறிந்தனர்.

3) சேதியல்

* டான் ஷெவுட்மன் (இஸ்ரேல்)

:- Quasi crystals (பகுதி படிகம்) எனும் புதிய இரசாயன கட்டமைப்பை கண்டுபடித்தமை

4) இலக்கியம்

* தோமஸ் ட்ரான்ஸ்ரூமரூக் (சுவீடன்)

கவிதை :- மிஸ்டிக்கல் வெர்சடைல் அண்ட்சேட்

5) சமாதானம்

* எலன் ஜோன்சன் சேர்வீல் (சைபீரியா ஜனாதிபதி)
* லேமா பேர்வி (லைபீரியா சமாதான பணிப்பாளர்)
* தலாக்குல்கர்மான்

:- பெண்களுக்கான உரிமைகளுக்காக ஆற்றிய பணி

6) பொருளியல்

* தோமஸ் சேர்ஜன் (அமெரிக்கா)
* கிறிஸ்தோபர் சிம்ஸ் (அமெரிக்கா)

:- மெகரோ - பொருளியல் அரச பொருளாதார கொள்கை திட்டமிடல் தொடர்பான ஆய்வு

சகலகலாவல்லி மாலை என்றும்

சரஸ்வதி தோத்திரம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குந் தாதுகோ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவிண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகோள் கரும்பே
சகல கலாவல்லியே. (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியுற் பணிந்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைபாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலா வல்லியே. (2)

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கோ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலா வல்லியே. (3)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கம் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. (4)

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தலா ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. (5)

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. (6)

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமெப்பாற்
கூட்டும் பாடிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்ம்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. (7)

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னானஞ்சேர்
சொல்விக்கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. (8)

சொற்கும் பொருட்டு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே. (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே. (10)

சிரம் தாழ்த்தி நன்றி செலுத்துகின்றோம்.

"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்றமகற்கு"

எமது தந்தையின் அமரத்துவம் அறிந்து நேரடியாகவும், தொலைபேசிமூலமாகவும் அனுதாபம் தெரிவித்த உறவுகள் நண்பர்கள், புலம்பெயர்ந்த உறவுகள் அனைவருக்கும், நோயுற்ற வேளைகளில் சிகிச்சை அழித்த கழுபோவில போதனா வைத்தியசாலை டாக்டர்கள், ஊழியர்கள் மற்றும் றோயல் வைத்தியாலை Professor இந்திரகுமார், Dr.மணிவண்ணன் அவர்கட்கும் பலவழிகளிலும் உதவிய உற்றார் உறவினர் ஊரார் நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும், இறுதிப்பயணத்தில் மலர்வளயம் வைத்து கௌரவப்படுத்தி அஞ்சலிசெலுத்திய சுவிஸ்கிளை பழைய மாணவர்கட்கும், இளங்கோ சனசமூக நிலைய உறுப்பிண்கட்கும் அமரரின் நூலுக்கு ஆக்கங்கள் தந்துதவிய அனைவ்ருக்கும் இறுதிச்சடங்களிலும் அந்தியேஷ்டி கிரியை, ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் கலந்து எம்மை கொரவப்படுத்தியவர்களுக்கும், மலர்வலையம் சாத்திய நண்பர்கள் Trans Lanka Packaging Company க்கும் எமக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய Karan Food city and Karan Electricals ஸ்தாபனத்தார்களுக்கும் இந் நூலை சிறப்புற அச்சிட்டு தந்த Selva Printers க்கும் மனமார்ந்த எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

வம்ச விருட்சம்

அமரர் செல்லையா இலட்சுமி

அமரர்
சோதிமுத்து சின்னத்துரை

அமரர்
கணேசன்

யோகம்மா
செல்லப்பாக்கியம்

துரைராஜா

அமரர்
கணேசன் செல்வேஸ்வரி

பரிமளா
+
ரவீந்திரன்

கிரிதரன்
+
கீதமணி

அமிர்தவர்ஷன்
இராகவர்ஷன்

சனாதரன்
+
ஜெசிந்தாதேவி

அபிநயா

கோசலா
+
வேல்நாதன்

விஷ்மிதன்
அர்ஷனன்

வம்ச விருட்சம்



அமரர்
செல்லையா தங்கம்மா
யோகம்மா
செல்லப்பாக்கியம்
துரைராஜா
அமரர்
செல்வேஸ்வரி
இராஜேஸ்வரி தங்கத்துரை
அமரர்
கணேசன் செல்வேஸ்வரி
யோகேஸ்வரி யோகராஜா
செல்வராஜா (மதியழகன்)
னாதரன்
+
ிந்தாதேவி
அபிநயா
கோசலா
+
வேல்நாதன்
விஷ்மிதன்
அர்ஷனன்
வினோதரன்
+
சுகிர்தா

செல்வா பிறிண்டேர்ஸ் வி.வி.ரி றோட், நாவலடி, உடுப்பிட்டி.
தொ.இல :- 021 226 3332